CHENNAI KONGU NANBARGAL MALAR

சென்னை

# கொங்கு

நண்பர்கள் மலர்

ஏர் 10 • உழவு 5 • திருவள்ளுவர் ஆண்டு 2056 • விலை ரூ20/- • ஏப்ரல் 2025 (வைகாசி-ஆனி)




இன்ஜின் மேன்

## ஆர். வேலுசாமி

அன்று மண்ணெண்ணெய் விளக்கில் படிப்பு!
இன்று மஹிந்திராவின் இதயத்துடிப்பு!




AMMA NAANA




**Mr. V. R. Govindasamy**
**Mrs. G. Rajam**
Founders
Ph: +91 94443 99199

**M. Senthilraj**
CEO
Ph: +91 94443 99998

# ECR
# MRC NAGAR
# MADURAVAYOL

No.100, Chamiers Road,
Teynampet,
Chennai - 600 018.

+91 98843 09993

ammanaana.staff@gmail.com



# எங்கள் கொடி

**வாழ்க** எங்கள் மணிக்கொடி
வாழ்க எங்கள் இந்தியா
வீழ்க தீமை யாவையும்
வெற்றி என்றும் ஓங்கவே.

எங்கள் நாட்டின் கொடியிது
என்றும் ஓங்கி நிற்கவே
பொங்கும் அன்பில் கூடிநாம்
புரிவோம் நல்ல சேவையே.

சொந்த நாட்டின் கொடியினை
சூழ்ந்து நின்று யாவரும்
எந்த நாளும் காத்துமே
இன்ப மெய்தி வாழுவோம்.

-பெ.தூரன்

**Published & Edited by:**
The President on behalf of Kongu Nanbargal Sangam,
Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street, Royapettah,
Chennai - 600014.
Printed by: M.Shaik Dawood, Dawood Graphics, No. 63, Muthu Mudali Street,
Royapettah, Chennai - 600 014.

**ஆசிரியர் குறிப்பு**

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

## கொங்கு நண்பர்கள் சங்கம் சென்னை

### நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

தலைவர்
**V.K.செல்வக்குமார்**
MD–Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

செயலாளர்
**M.அமராபதி**
Managing Partner – Jairram Hi–Tech Products
94440 60885

பொருளாளர்
**C.கொங்குவேள்**
MD – Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

துணைத் தலைவர்கள்
**R.சண்முகவேல்**
MD – Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
MD–Sengam Transport
94432 66610

இணைச்செயலாளர்கள்
**C.அரவிந்தன்**
MD – K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
Chairman – SKV Educational Institution's
9842754245

### செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Director – Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor
(India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Chairman – Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
MD – PRIM DRUGS & PHARMACEUTI–CALS I.PVT., LTD.,
94440 18021

**N.P.இசையழகள்**
Proprietor Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
Proprietor– RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
Chairman – ISSM Business Schooll
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
JMD – Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
Proprietor – NU–Tech Components
9789973123

**K.ஜெகன் நாதன்**
President – Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
MD – Sri Devkrish Group
98422 29503

**விசா M.சண்முகம்**
Managing Partner – Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
Managing Director – BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
Managing Partner – V.M.D.
Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
Director – RAWS N–Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
Director–P&C Projects (P) Ltd.,
9444070033

Dr.**சண்முகப்பிரியா** MBBS
AGS Complex & Ware Houses,
7824880456

தணிக்கையாளர் **R.பாலசந்திரன் CA**



அட்டை வடிவமைப்பு - **செ.சக்திக்குமரன்**

# தலைவர் மடல்



**அன்புடையீர் வணக்கம் நலம் நலம் பல விழைகிறேன்.**

இம்மாத இதழ் வாயிலாக தங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஏப்ரல் 17 அன்று தீரன் சின்னமலையின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று சென்னை கிண்டியில் உள்ள அவரது சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் முன்னாள் அமைச்சர்களும் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும், பல்வேறு அரசியல் கட்சியினர்களும், கொங்கு சொந்தங்கள் ஆயிரக்கணக்கானோரும் கலந்து கொண்டு விடுதலைப் போராட்ட வீரன் தீரன் சின்னமலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தாலாட்டு பாடல்கள், கும்மிப் பாடல்கள், தொழில் பாடல்கள், காதல் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என அத்தனையும் தொகுத்து வழங்கியுள்ள "கொங்கு மண்டல கிராமிய இலக்கியங்கள்" என்ற நூலை சமீபத்தில் படித்தேன். வேளாண் பெருங்குடி மக்களாகிய நம் இனத்தின் வாழ்வியல் பாடல்கள் என்பது பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையோடு ஒன்றி இருந்து வந்துள்ளது. அப்படிப்பட்ட கொங்கு இலக்கியப் பாடல்கள் அதாவது பிறந்தவுடன் தாலாட்டு பாடல், வேளாண் தொழிலில் ஈடுபடும் பொழுது ஏற்றம் இறைக்க பாடல், நடவுப் பாடல்கள் என்று எல்லாம் நம் வாழ்வோடு இயங்கி வந்துள்ளது. அதேபோல இறப்பில் ஒப்பாரி பாடல்கள் என அந்தப் பாடல்கள் அத்தனையும் தொகுத்துப் புத்தகத்தில் வழங்கி உள்ளார்கள். அந்நூலைப் பற்றிய குறிப்பு நூல் நயம் பகுதியில் கொடுத்துள்ளோம். இது போன்ற நூல்களை வாங்கிப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பத்மபூஷன் ம.ப. பெரியசாமி தூரன் அவர்களின், "சங்ககிரி கோட்டையின் மர்மம்" என்ற சிறுவர் தொடர்கதை கடந்த இதழிலிருந்து வெளி வருகிறது. இந்த விடுமுறை நாட்களில் உங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்தும், படிக்கச் சொல்லிக் கேட்டும் இன்புறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நமது சங்கத் தணிக்கையாளர் திரு.ஆர். பாலச்சந்திரன் அவர்களின் புதல்வன் திரு. சிவச்சந்திரன் அவர்கள் நடந்து முடிந்த யுபிஎஸ்சி தேர்வில் தமிழ்நாட்டில் முதலிடத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்பதை மகிழ்வோடு தெரிவிப்பதோடு பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொங்கு நாட்டில் சிறந்த தொண்டாற்றிய நமது பெரியோர்களைப் பற்றி நினைவு கூர்ந்து ஒவ்வொரு மாதமும் வரலாற்றுக் குறிப்பை வெளியிட்டு வருகிறோம். இந்த மாத இதழில் திரு. ரா.கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்களைப் பற்றிய கட்டுரை ஒன்றைத் தீட்டி உள்ளோம். திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் கொங்கு நாட்டு வேளாண் பெருங்குடி மக்களுக்கு அரணாகத் திகழ்ந்துள்ளார். இன்றைய ரூட்ஸ் நிறுவனங்களின் தலைவர் திரு. கி.இராமசாமி அவர்களின் தந்தையார் தான் திரு. ரா.கிருஷ்ணசாமி கவுண்டர் என்பது குறிப்பிடத் தகுந்தது.

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் திமிர்ந்த ஞானச் செருக்கும்....**

என்ற மகாகவி பாரதியின் வைர வரிகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர் திரு. ரா.கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் அவர்களுடைய வாழ்க்கையை பற்றிய சிறு கட்டுரையை நமக்கு வழங்கியவர் சாத்தந்தை கூட்டத்தைச் சேர்ந்த திரு.கண்ணுசாமி அவர்கள் என்பதை நன்றியோடு நினைவு கூர்கிறோம்.

இந்த மாத இதழின் அட்டையை அலங்கரிக்கும் ஆர். வேலுசாமி அவர்கள் நாமக்கல், ஆண்டிப்பட்டிப்புதூரில் மணியன் குலத்தில் பிறந்தவர். **"அறிவுடையார் எல்லாம் உடையார்"** என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்கிறார்.

மஹிந்திராவின் திறன் வாய்ந்த எஞ்சின்களை வடிவமைக்கும் ஆறாயிரம் பேர் கொண்ட குழுவின் தலைவர். தற்பொழுது மஹிந்திரா கார் நிறுவனத்தின் இணை மேலாண் இயக்குனராகவும் உயர்ந்திருக்கும் இவரைப் பற்றிய செய்தியே இம்மாத இதழின் அட்டை சொல்லும் சேதியாக இடம்பெற்றுள்ளது.

நன்றி!

அன்புடன்

தலைவர்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்



# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)






**FACILITIES**

| | |
|---|---|
| AC Rooms | TV - CCTV - Wifi |
| Double Cot | Safety Secure |
| Water Bottle | Bathroom Heater |
| Towel | Drinking Water Dispenser |

**Discount for Members**

**"தீரன் சின்னமலை மாளிகை"**
நெ.72, பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**chennaikongu@gmail.com**
**044 - 4266 8046**
**Cell : 93815 45451**



## கொங்கு மகளிர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Sharing Room | Safety Secure |
| Double Cot | Bathroom Heater |
| CCTV - Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

**chennaikongu@gmail.com**
**044 - 4266 8046 | Cell : 63839 85919**

**"கொங்கு நாடு இல்லம்"** 27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014




## கொங்கு மாணவர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Double Cot | Safety Secure |
| CCTV | Bathroom Heater |
| Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

**"வெள்ளி விழா இல்லம்"** 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.

**www.kongunanbargalsangam.com**



# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்...

மாவீரன் தீரன் சின்னமலை பிறந்தநாளான ஏப்ரல் 17 அன்று சென்னை கிண்டியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அரசு விழாவாக வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர், சங்கத்தின் முன்னாள் செயலாளரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான திரு.ஈ.ஆர். ஈஸ்வரன் ஆகியோர் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

தீரன் சின்னமலை மாளிகை, ராயப்பேட்டை, டீலக்ஸ் அறை 9/5/25 அன்று திறக்கப்பட்டது, இதன் முழு பராமரிப்பு செலவுகளை ஏற்று செய்து கொடுத்த சங்கப் பொருளாளர் திரு.கொங்குவேள் அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டீலக்ஸ் அறை சேவைகளை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் வருடாந்திர விளையாட்டு விழா வரும் 20/7/25 அன்று நடைபெற உள்ளது.கொங்கு சொந்தங்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினரோடு பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.பள்ளி,கல்லூரிகளில் படிக்கும் தங்கள் செல்வங்களை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்குமாய் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்!

ஆண்டு தோறும் நடக்கும் நம் கொங்கு சொந்தங்களின் சங்கமிப்பான குடும்ப விழா வரும் ஜூலை 27 ம் தேதி நடைபெற உள்ளது.நமது சமூகத்தில் தத்தம் துறைகளில் சிறந்து விளங்கும் கொங்கு சான்றோரை கௌரவிக்கும் ஒரு சிறப்பான தினம் நமது குடும்ப விழா என்றால் அது மிகையாகாது.

பத்தாம் வகுப்பு மற்றும் 12- ம் வகுப்பில் சிறப்புறத் தேர்ச்சி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,

**எம்.அமராபதி**

செயலாளர்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்


ISO 9001 2015 CERTIFIED
METROLABS
Lab Furniture | Fume Hood | Laminar Airflow | Storage Cupboard
We are there when you need us !
Design | Manufacture | Supply | Install
SCHOOL LABORATORY & CLASS ROOM FURNITURE
For CBSE, ICSE, IB, IGCSE, CIE, and all state curricula.
"INNOVATIVE LAB AND CLASS ROOM FURNITURE, ENDLESS POSSIBILITIES!"
PHYSICS LAB FURNITURE
CHEMISTRY LAB FURITURE
BIOLOGY LAB FURNITURE
COMPOSITE LAB FURNITURE
COMPUTER LAB FURNITURE
ROBOTICS LAB FURNITURE
MATHEMATICS LAB FURNITURE
FUME CUPBOARDS
CLASS ROOM FURNITURE
Metrolabs: Your Trusted Lab Furniture Partner
WE FOCUS ON
Complimentary custom design
Unparalleled manufacturing quality
Secure and efficient supply chain
Timely installation as per lab plan
Exceptional after-sales support
WHY CHOOSE US?
"Trusted partner for your educational institution with the highest quality, Functionality and customizable Laboratory and Class Room Furniture"
LET'S CONNECT!
+91-7010075103
enquiry@schoollabfurniture.com
www.schoollabfurniture.com
LABNITURE®
Complete lab work tables
Chennai | Bengaluru | Hyderabad | Guntur | Bhubaneshwar | Guwahati | Pune | Bhopal | Lucknow | Agra | Jaipur

# வாழ்த்துகிறோம்...

## கொங்கு நண்பர்கள் சங்கம், சேலம்.

பதிவு எண் : 08/2015



தலைவர்
**P. தங்கவேல்**
**97877 44040**



செயலாளர்
**A. மதியரசு**
**88830 01000**



பொருளாளர்
**P. மணிசங்கர்**
**98427 30017**



ஆடிட்டர் எஸ். இளங்கோவன்



G. ஜெயபிரகாஷ்

நிரந்தர சிறப்பு அழைப்பாளர்கள் (முன்னாள் தலைவர்கள்)

### துணைதலைவர்கள்

K.சத்தியமூர்த்தி 94432 39976
M.சிவகுமார் 94422 92662
C.ராஜமாணிக்கம் 90923 22799
N.S.ஜெயவேல் 94432 52277
P.வெங்கடேசன் 90255 77770
வெங்கடாசலம் 90423 39064

### இணைச்செயலாளர்கள்

M.N. திருநாவுக்கரசு 86084 44777
C. செந்தில்குமார் 98948 03636
M.ரஞ்சித்குமார் 98425 14492
C.தங்கவேல் 94429 84708
S.கார்த்திகேயன் 94432 06107
R.C. இளங்கோ (பாஸ்கர்) 93603 89703

### செயற்குழு உறுப்பினர்கள்

R. இனஞ்செழியன் 94422 57057
A.P.சண்முகம் 99440 41080
P.சௌந்தரராஜன் 94435 75312
G.S.K. சுகந்தினி 93453 45445
S. ராஜமாணிக்கம் 99528 33334
R.புஷ்பநாதன் 94421 55050
K.ராதாகிருஷ்ணன் 94437 14965
P.நந்தினி 94425 97005
R. பூர்ணவேல் 94980 52255
R.லோக நாதன் 98429 48988
K.பாஸ்கர் 94439 82449
K.செல்வராஜ் 98427 12315
M. செந்தில்குமார் 94881 21117
S.S.செந்தில்ராஜன் 98940 30017
K.அரவிந்தன் 98947 45789
G.ஸ்ரீகவின் 90952 52680
M.மனோகரன் 98941 66899
K.ரங்கநாதன் 94861 00733
எஸ்.கே.மூர்த்தி 94433 62177
ஆர். ரத்தினவேல் 94434 21345
எ.நவின்குமார் 95006 29939
V.S.பூபாலன் 94437 63007

*சேலம் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2025-2028 ஆண்டிற்கான புதிய நிர்வாக குழுவிற்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.*



# நேற்றின் எச்சங்கள்...

எறும்பூர தேய்ந்த
பாறை யாய்
நினைவூர தேய்ந்த மனம்.

கால்கள் பதிய சிதைந்த புல்
வெளியாய் வாழ்வின்
வடுக்களால் சிதைந்த
மனவெளி.

அலைகள் இடறிய நாவாயாய்
தொழிலில் வீழ்த்திய
நட்புறவு.

அன்பை விதைத்து அவஸ்தை
விளைய ஆடிப்போன
என் வாழ்வு.

என்னை தீண்டி
மைந்தனை தீண்டி,
மனையறம்
தனையும் தீண்டிய
சில சுற்றம்.

வனப் பிரஸ்த வயதிலும்
செல்லரித்த ஆலாய்
வீழாமல் நிற்பது
தேர்ந்த நட்புடன்
ஓர்ந்த உறவுகளால்.

நாடுங்கள் உறு நட்பை
தேடுங்கள் நல்லுறவை.
சிறக்கும் வாழ்வு!
இனிக்கும் வயோதிகம்!

"வாழி நலம் சூழ"
அன்புடன்
கலாப்ரியன்
(பூபதி)


SUN-X CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
SUN-X CONCRETE
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
www.sunxconcrete.org



# ரா.கிருஷ்ணசாமி கவுண்டர்

அனைவராலும் அன்பாகரா.கி. என அழைக்கப்பட்ட ரா.கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் கொங்கு வேளாளர் சமூகத்தில் சாத்தந்தை குலத்தில் 15.09.1907-ல் கோவை கணபதியில் பிறந்தார்.



விவசாயிகள் நலனில் பெரும் அக்கறை கொண்ட அவர் இடைத்தரகர் இன்றி விவசாயிகளே நேரடியாக விளை பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என தான் பயிரிட்ட மல்பரியை நேரடியாக அரசுக்கு விற்றார்.

மரவள்ளிக்கிழங்கு விவசாயிகள் படும் சிரமத்தைக் கண்டு தான் உற்பத்தி செய்த மரவள்ளிக்கிழங்கினைக் கொண்டு கோவையில் ஒரு ஜவ்வரிசி ஆலையை அமைத்தார்.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஜி.டி.நாயுடு மட்டுமே பேருந்து இயக்கினார். அவருக்கு அடுத்து ரா.கி. அவர்கள் கோவை கேரளா எல்லை வரை இரண்டு பேருந்துகளை இயக்கினார். ஆங்கிலேய அரசு 'ஜி' பர்மிட் முறையை புகுத்தி வேண்டு மென்றே ரா.கி. அவர்களுக்கு பர்மிட் வழங்கவில்லை. ஆங்கிலேய அரசை எதிர்த்து கட்டணமில்லாமல் பேருந்துளை வெற்றிகரமாக இயக்கி, பல வழக்குகளை சந்தித்தவர்.

பெட்ரோல் எரிபொருள் தட்டுப்பாடு இருந்த காலத்தில் மரக்கரி எரிவாயுக்கருவியை உருவாக்கி T.V.S, சிம்சன் போன்ற பல பேருந்து நிறுவனங்களுக்கு மரக்கரி எரிவாயு என்ஜின் சாதனத்தைப் பொருத்தித் தந்தார்.

முதன் முதலில் சாண எரிவாயு அடுப்பு அமைத்து சமையலுக்கு பயன்படுத்தலாம் என கண்டு பிடித்து தனது பண்ணையிலும், வீட்டிலும் சாணஎரிவாயு அடுப்பு அமைத்து தொழில்துறை மாநாட்டில் தங்கப்பதக்கம் பெற்றார்.

நாடு விடுதலைக்கு பிறகு விவசாயிகளுக்காக ஒருசங்கத்தை துவக்கி அதன் செயலாளராக இருந்து திறம்பட செயல்பட்டார்.

முதல்வர் O.P. இராமசாமி ரெட்டியாரை அழைத்து விவசாயிகள் மாநாடு நடத்தி விவசாயிகளிடமிருந்து உணவு தானியங்கள் கட்டாய கொள்முதலுக்கு

தடைகோரி மத்திய அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றினார். மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாததால் ஓமந்தூரார் மனவேதனையுடன் தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

நில உச்சவரம்பு சட்டத்திற்கு எதிராக உச்சநீதிமன்றம் வரை சென்று நிலச்சீர்திருத்தச்சட்டம் 1961, பிரிவு 58 செல்லாது என தீர்ப்பு பெற்றார். வடமாநில விவசாயிகள் ரா.கி. அவர்களை கோவையில் சந்தித்து பாராட்டினர் . இதற்கு கல்கி 1964-ல் தலையங்கம் எழுதி பாராட்டியது.

சுதந்திராக் கட்சியில் இணைந்து 1967-ல் அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆனார். விவசாய வருமான வரி சட்டம், 1970-ல்விவசாய மின் கட்டண உயர்வு ஆகியவற்றை எதிர்த்து போராட்டங்கள் நடத்தி கைதானார்.

1970-ல் விவசாயிகளுக்கெதிரான அரசின் நிலைப்பாட்டை எதிர்த்து தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.

அனைத்து மாவட்ட விவசாயிகளையும் ஒன்றினைத்து "தமிழ்நாடு மாநில விவசாய சங்கம்" என்ற அமைப்பை நிறுவினார்.

மின்கட்டண உயர்வுக்கு எதிராக போராட்டங்களை நடத்தியபோது அனைவரையும் அரசு சிறை வைத்தது.

கோவையில் நடத்திய கட்டை வண்டி போராட்டம் சரித்திர நிகழ்வு. மின்கட்டண உயர்வுக்கு எதிரான போராட்டத்தில் 43 விவசாயிகள் தமிழகம் முழுவதும் உயிரிழந்தனர். விவசாயிகளுக்காக "ஏர் உழவன்" என்னும் வாரஇதழைநடத்திவந்தார்.

இயற்கைமருத்துவத்தில்நாட்டம்கொண்டரா.கி. அவர்கள், கோவையில் "R.K.இயற்கை நலமருத்துவ மனையை"நிறுவி நடத்தி வந்தார். இன்றும் அவரது மகன் திரு.K.ராமசாமி அவர்கள் அதனை சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

1990-ல் தனதுகுல தெய்வமான மயிலாடியில் அமைந்துள்ள அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் சிதிலமடைந்தநிலையில் இருந்ததை கண்டு பெரும் பொருட் செலவில் முற்றிலும் புதியதாக திருக்கோயிலை அமைத்து 1994-ல் குடமுழுக்கு நடத்தினார்.

அவரது வழி வந்த அவரது மகன்




திரு.K.ராமசாமி அவர்களும் வெள்ளோட்டில் உள்ள தங்கள் குலதெய்வமான அருள்மிகு இராசாசுவாமி நல்லமங்கையம்மன் திருக்கோயிலுக்கு பெரும் பொருட்செலவில் ராஜகோபுரம் அமைத்துக் கொடுத்துள்ளார்.

திரு.K.ராமசாமி அவர்கள் கோவையின் பெருமைமிக்க "ROOTS" குழுமத்தை சிறப்புடன் நடத்தி வருகிறார்.

இப்படி பலசிறப்புகள் வாய்ந்த கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் 02.01.2004-ல் தனது 97-வது வயதில் இயற்கை எய்தினார்.

**"முதன் முதலில் சாண எரிவாயு அடுப்பு அமைத்து சமையலுக்கு பயன்படுதலாம் என கண்டு பிடித்து தனது பண்ணையிலும், வீட்டிலும் சாணஎரிவாயு அடுப்பு அமைத்து தொழில்துறை மாநாட்டில் தங்கப்பதக்கம் பெற்றார்."**



# தமிழறிஞர் சிலம்பொலி சு.செல்லப்பன் நினைவேந்தல் விழா காட்சிகள்







With best compliments from
BANNARI AMMAN FOOD PRODUCTS PVT LTD.,
Manufacturers of BANNARI BRAND
Maida, Sooji,
Atta and Bran
No.6, Sidco Industrial Estate,
Thirumazhisai, Chennai-600 124
Phone: 044-26810990,26811855



சிறுகதை

டாக்டர் எஸ்.அசோகன்

# உடன் கட்டை....

குப்பையை கிளறி வாழும் கோழியாகிய எனக்கு மனிதர்கள் பேசிய வார்த்தைகள் எப்படி புரிய ஆரம்பித்தது என்று எனக்குத் தெரியாது. நல்ல பழக்கமா, கெட்டப்பழக்கமா எனவும் தெரியாது.

மனிதர்கள் பேச்சு எனக்கு புரிவது போல் அனைத்து கோழிகளுக்கும் புரியும் என நீண்டநாட்கள் நம்பியிருந்தேன். அப்படியில்லை என தெரியவந்த போது எனக்கு ஆரம்பத்தில் பெருமையாகவும் பிறகு கொஞ்சம் கர்வமாகவும் இருந்தது. இன்று காலைதான் நான் அதற்காக மிகவும் கவலைப்பட்டேன். பிறகு மனம் தேறி, மனம் மாறி, இப்போது நடப்பது நடக்க, உடன் பட்டேன்.

என் குலம், கோத்திரம் எல்லாம் எனக்குத்தெரியாது. என் நினைவில் நான் சிறிய உருவத்தில் என்னையொத்த பதின்மூன்று சிறு குஞ்சுகளுடன் என் அம்மாவின் பின் ஓடிக்கொண்டிருந்ததுதான் நினைவில் உள்ளது. திடீரென்று மேலிருந்து கழுகு (மனிதர்கள் பேச்சிலிருந்து புரிந்து கொண்டது.....) பாய்ந்து வரும். என் அம்மா ‘கொக் கொக்...கொக்’ என பெரும் சத்தம் போட்டுக்கொண்டு, தன் இறகுகளை விரித்து, அவற்றால் எங்களை பாதுகாத்து கொண்டு, பாதுகாப்பான இடம் தேடி ஓடும். அப்படி இரண்டு உடன் பிறந்தவர்களை கழுகிடம் பறிகொடுத்தோம். ஒரு உடன்பிறப்பை எங்களுடன் வாழும் நாய் சாப்பிட்டு விட்டது. நாங்கள் குஞ்சுகளும் சேவல்களும் பேடைகளுமாய் இருநூறு வரை இருப்போம். எண்ணிக்கையை உறுதியாக சொல்ல முடியாது. ஏனென்றால், எங்களில் சிலரை அவ்வப்போது பிடித்து சமைத்து விடுவார்கள். வீட்டில் யாருக்காவது, சளி பிடித்தால், விருந்தாளிகள் வந்தால், ஞாயிற்றுக்கிழமைகள் என பல காரணங்கள். எங்கள் கறி ருசியாக இருப்பதாக பேசிக்கொள்வார்கள். எங்கள் பாடு பரவாயில்லை. எங்கள் தோட்டத்திலேயே ஒரு கோழிப்பண்ணையும் உள்ளது. அதில் ஆயிரக்கணக்கில் கோழிகளை கூண்டுக்குள் வளர்க்கிறார்கள். ஆரம்பத்தில் பொறாமையாக இருக்கும் .... கூண்டுக்குள் இருக்கும்

கோழியின் மூக்கருகில் ஒரு குழாய் தொங்கும். அதிலிருந்து வரும் தண்ணீரை கோழிகள் குடிக்கும். உட்கார்ந்த இடத்திற்கே உணவு வரும். எங்களைப்போல் வயல்களிலும் குப்பை மேட்டிலும் உணவுக்காக அலைய வேண்டிய தில்லை.... ஆனால் கொஞ்ச நாட்களுக்குப்பிறகு, ஒரே நாளில் அத்தனை கோழிகளையும் லாரிகளில் ஏற்றிச்சென்று கறிக்காக விற்பார்கள். அந்த கூண்டு வாழ்க்கைக்கு எங்கள் வாழ்க்கை மேலானது என்பது தெளிவாயிற்று. இந்த கதை போதும்.

நான் என் தாயிடமிருந்து பிரிந்த பின், எங்கள் வீட்டு பந்தலையே சுற்றி வருவேன். வாசலில் கட்டிலில் ஒரு நான்கடி தடியை உடன் வைத்துக்கொண்டு ஒரு வெள்ளைச்சேலை பாட்டி நாள் முழுதும் உட்காருவதும், எழுவதும், படுப்பதுமாக இருப்பார்கள். கட்டிலில் அமர்ந்தே, அவருடைய மருமகள் இறுக்கமான முகத்தோடும், அதைவிட கடினமாக இறுகிய மனசோடும் வட்டியில் போட்டு வைக்கும் சாப்பாட்டை சாப்பிடுவார். அப்படி சாப்பிடும் போது சிந்தும் பருக்கைகளுக்காகவே கட்டிலை சுற்றியே நான் இருப்பேன். பாதி சாப்பிட்டுவிட்டு மீதியை பிறகு சாப்பிடலாமென வைப்பார். அதை சாப்பிட வரும் நாயையும் பூனையையும் விரட்டவும், சில நேரங்களில் சிரமத்துடன் எழுந்து நடக்கவும் தடியை உபயோகிப்பார்.

*“வாசலில் கட்டிலில் ஒரு நான்கடி தடியை உடன் வைத்துக்கொண்டு ஒரு வெள்ளைச்சேலை பாட்டி நாள் முழுதும் உட்காருவதும், எழுவதும், படுப்பதுமாக இருப்பார்கள். கட்டிலில் அமர்ந்தே, அவருடைய மருமகள் இறுக்கமான முகத்தோடும், அதைவிட கடினமாக இறுகிய மனசோடும் வட்டியில் போட்டு வைக்கும் சாப்பாட்டை சாப்பிடுவார்.”*



அப்படி சாப்பிடும் போது சிந்தும் பருக்கைகளை கொத்தி சாப்பிடுவேன். பாட்டியின் மகன் அடிக்கடி வெளியே போய்விடுவார். மகளுக்கு கல்யாணம் ஆகி வெளியூரில் இருக்கிறார். பேரக்குழந்தைகள் இருவர் கல்லூரியில் படிக்கிறார்களாம். (இதையெல்லாம் பாட்டி கூற, தெரிந்து கொண்டேன்.) பெரும்பாலான நேரங்களில் பாட்டியும் அவரை முழுமையாக வெறுக்கும் மருமகளுமே வீட்டில் இருக்க வேண்டி வந்தது. மருமகள் வேளாவேளைக்கோ, வேளை தவறியோ வேண்டாவெறுப்போடு கடனேயென்று போட்டு வைப்பதை சாப்பிட்டுவிட்டு எதற்கோ காத்திருக்கும்

பாட்டி, பல நேரங்களில் புலம்பி கொண்டிருப்பார். அடிக்கடி மருமகளுக்கும் அவருக்கும் சண்டை வரும். சண்டையென்று சொல்ல முடியாது. பெரும்பாலும் மருமகள் வெறுப்போடு கத்துவார். பாட்டி ஹீனக்குரலில் புலம்புவார். அப்படி புலம்பும் போது நான் கழுத்தை ஒரு பக்கமாக சாய்த்துக்கொண்டு உற்றுக்கேட்பேன். ஆமோதிக்கும் போது தலையை மேலும்கீழும் ஆட்டுவேன். மகிழும் போது இறக்கையை படபடவென அடித்து ‘கெக் கெக்’ என சத்தமிடுவேன். சில நேரங்களில் சகக்கோழிகளுக்கு எங்கள் மொழியில் எடுத்து சொல்லி கூட்டமாக கூட்டிவந்து பாட்டியின் கட்டிலைச்சுற்றி வந்து, சத்தமிட்டு பாட்டியை சந்தோஷ படுத்துவதாக நினைத்துக்கொள்வோம். ஆனால் பாட்டியின்

புலம்பல்களில் இருந்து நான் அறிந்து கொண்டவை, இவைதான். மருமகள் , பாட்டியின் மகளை வரவிடுவதில்லை. பேரக்குழந்தைகளையும் அண்டவிடுவதில்லை. மகனையும் பெருமளவில் கட்டுப்படுத்துகிறார். இரண்டாம் குழந்தைப்பருவமான முதுமையில் மிகவும் தேவைப்படும் பாசத்தையும் பரிவையும் கொடுக்க மறுப்பது மட்டுமில்லாமல் கிடைக்கவிடாமல் தடுக்கிறார். சில நேரங்களில் நன்றிக்கடனாக மகன் தர வந்தாலும் தட்டிப்பறிக்கிறார். குழந்தைப்பருவத்தில் பாசம் கிடைக்கவில்லையென்றால் குழந்தைக்கு ஒன்றும் பெரிதாக தெரியாது. முதுமையில் கிடைக்கப் பெறாத போது, தான் பாடுபட்டு வளர்த்த வளர்ப்பினால், உருவாக்கிய குடும்பத்தால் உதாசீனப்படுத்தப்படும் போது உருக்குலைந்து போவார்கள். நிலை தடுமாறுவார்கள். கொலுகொம்பு பறிக்கப்பட்ட கொடியாவார்கள். பாட்டிக்கும் அதுதான் நடந்தது. பாட்டிக்கு நம்பிக்கையான உறவானேன். எனக்கு மனிதர் வார்த்தைகள் புரிகின்றன என்பது அவருக்கு புரிந்ததா என எனக்கு தெரியாது. ஆனால் அவர் என்னை வடிகாலாக நினைத்து தன் மனக்கிடையை அவ்வப்போது கொட்டித்தீர்த்தார்.

இன்று காலை பாட்டி இறந்து போனார். உறவு வந்தது. ஊர் திரண்டது. பாடை கட்டினார்கள். மேளம் வைத்தார்கள். ஒப்பாரி சத்தமும் கேட்டது. மருமகள் கூட அழுதார். மகளுக்கு சம்பிரதாயமான அனுமதி கிடைத்தது. மகள் கதறி அழுதார். இந்த குடும்பத்துக்கும் தனக்குமான கடைசி தொடர்பு அறுந்ததாக பரிதவித்தார். இறுதி ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். நானும் அந்த இடத்தையே சுற்றி வந்து கொண்டிருந்தேன். கூட்டத்தில் ஒருவர் பாட்டியுடன் அனுப்ப கோழி ஒன்று வேண்டுமென்று சொன்னார். மருமகள், ‘இந்த கோழிதான் பாட்டி கட்டிலையே சுத்தி வரும். இதையே பிடிங்க’ என்றார்.

மனிதர்கள் வார்த்தை எனக்கு புரியும் காரணத்தால், நான் உடனே ஓடி வைக்கோல்போருக்கு அடியில் மறைந்து கொண்டேன். என்னை துரத்தியவர்களால் பிடிக்க முடியவில்லை. கொஞ்ச நேரம் முயன்று பார்த்து, முடியாமல் என்னை விட்டுவிட்டு வேறு கோழி தேடிப்போனார்கள். நானும் தனிமையில் யோசித்தேன்.

பாட்டியின் சிந்திய சோறும், எனக்காகவே சில நேரங்கள் மருமகளுக்கு தெரியாமல் போட்ட சோறும் கூடவே புலம்பிய புலம்பல்களும் அவருடைய தனிமையின் வெட்கையும், நீர் தேடும் வேராய் அன்பு தேடி அலைந்த மனமும் நினைவில் வந்தன. இன்றோ நாளையோ கறிக்கோழி ஆக வேண்டிய நான், பாட்டியுடன் செல்வதே உத்தமம் எனத்தோன்றியது. வைக்கோல்போருக்கடியிலிருந்து வெளிவந்து பந்தலை நோக்கி தயக்கமின்றி நடந்தேன். ‘கோழி கிடைத்துவிட்டது’ என ஒருவர் என் மீது பாய்ந்து அமுக்கினார். பாட்டியின் பாடையில் என்னையும் சேர்த்துக்கட்டினார்கள். இதோ மயானத்திற்கு ஊர்வலமாக போய்க்கொண்டிருக்கிறோம்.

**பின்குறிப்பு:**

பண்டைகாலத்து எகிப்து மன்னர்கள், தாங்கள் புதைபடும் போது ‘ஒரு அரண்மனைக்கான’ அத்தனை வசதிகளையும் உடன் புதைவித்துக்கொண்டார்கள் (Valley of Kings, Tutukhamu-mum’s tomb). இந்தியாவில் உடன்கட்டை தடுப்புச்சட்டம் (Sati abolition act ) 4/12/1829ல் நிறைவேறியது.

இந்துக்களில் சிலர், பல காரணங்களுக்காக குதிரை, பசு, பின் ஆடு, தற்போது கோழி என பிணத்துடன் புதைக்கவோ, எரிக்கவோ செய்கிறார்கள்.







## 25-ம் ஆண்டு பயணம்

# கடவுளைக்காண கயிலைக்கு வாருங்கள்...

## திருக்கயிலாயம் - மானஸரோவர் ரோடில் - 13 நாட்கள்

## திருக்கயிலாயம் - மானஸரோவர் ஹெலிகாப்டரில் 10 நாட்கள்





**ஜூன் முதல் செப்டம்பர் வரை மாதம் 2 குழுக்கள் புறப்படுகின்றோம்**

**24 ஆண்டுகள் அனுபவமுள்ள நாங்களே உங்களுக்கு சேவை செய்ய வருகின்றோம்.**

### உள்நாட்டு விமானச் சுற்றுலா

| நாட்கள் | |
|---|---|
| 6 நாட்கள் | காசி, கயா, அலகாபாத், அயோத்தி |
| 13 நாட்கள் | கங்கோத்ரி, யமுனோத்ரி<br>கேதார்நாத், பத்ரிநாத் ஹெலிகாப்டரில் 6 நாட்கள் |
| 6 நாட்கள் | அமர்நாத் பனிலிங்கம்<br>ஹெலிகாப்டரில் 5 நாட்கள் |
| 2 நாட்கள் | ஷிரடி, சனிசிங்கனாப்பூர் |
| 7 நாட்கள் | மஹா அவதார் பாபாஜி குகை<br>ஜிம்கார்பெட், நைனிடால், ஹரித்துவார் |
| 6 நாட்கள் | கடல்கோவில், படேல்சிலை |
| 6 நாட்கள் | கேங்டாங், டார்ஜிலிங் |
| 5 நாட்கள் | அந்தமான் தீவுகள் |
| 13 நாட்கள் | ராயல் ராஜஸ்தான் |
| 6 நாட்கள் | சிம்லா, குலு, மணாலி |
| 6 நாட்கள் | காஷ்மீர், சோனாமார்க், குல்மார்க் |
| 7 நாட்கள் | காமாக்யா, ஷில்லாங், சிரபுஞ்சி, காசிரங்கா, பங்களாதேஷ் பார்டர் |
| 8 நாட்கள் | ஆதி கைலாஷ் |

### வெளிநாட்டு விமானச் சுற்றுலா

| நாட்கள் | |
|---|---|
| 8 நாட்கள் | ஆன்மீக இலங்கை |
| 8 நாட்கள் | கம்போடியா, வியட்நாம் |
| 5 நாட்கள் | துபாய், அபுதாபி<br>பாலைவன ஷபாரி |
| 6 நாட்கள் | மலேசியா, சிங்கப்பூர் (சென்தோசா, ஜென்டிங், பத்துமலை, கோலாலம்பூர் யுனிவர்சல் ஸ்டுடியோ) |
| 8 நாட்கள் | ராயல் பூடான் |
| 7 நாட்கள் | இந்தோனேஷியா, பாலித்தீவுகள் |
| 15 நாட்கள் | EUROPE - 9 நாடுகள் |
| 6 நாட்கள் | முக்திநாத் |
| 8 நாட்கள் | முக்திநாத் |

எங்களது சுற்றுலாக்களை கமிஷன் அடிப்படையில் முன்பதிவு செய்ய ஏஜெண்ட்டுகள் தேவை

மாதத்தவணையிலும் பணம் செலுத்தி எங்கள் சுற்றுலாக்களில் கலந்து கொள்ளலாம் கட்டணத்தில் சலுகை உண்டு.

### Our Services

- Pilgrimage Yathras
- Corporate Tours
- Adventure Trips
- Educational Tours
- Fit & Group Tours
- Honeymoon Packages
- Resorts Booking
- Air Tickets
- Cruises Booking
- Passports, Visa
- Travel Insurance
- Money Exchange

தாங்கள் ஒரு குழுவாக இருந்தால் விரும்பும் தேதியில் விரும்பும் சுற்றுலாக்கள் நடத்தித் தருகின்றோம்.

அனைத்து உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கு அணுகவும்

EXCELLENCE 40 YEARS IN SERVICE



# மனோகர் டிராவல்ஸ் & டூர்ஸ் பிரைவேட் லிமிடெட்



31, பாவாடை வீதி, ஈரோடு - 638001.

## செல் : 78457 38387, 78457 38386

www.manohartravels.com e-mail : manohartravvels@gmail.com



நிச்சயதார்த்தம், திருமணம், எழுதிங்கள்சீர், வளைகாப்பு ஆகிய சீர்களுக்கும், இசையுடன் கலாச்சார சொற்பொழிவுக்கும், முழு மங்கல வாழ்த்து சொல்லுதலுக்கும், சக்கரகத்தி, பண்டாரம், ஏகாளி, (கட்டுகண்ணிகள்) தேவைக்கும் அணுகவும்

உங்கள் அருமைக்காரர், கயிலைச்சித்தர்

## தூரன் V.மனோகரக்கவுண்டர்

**மனோகர் டிராவல்ஸ், ஈரோடு - 638001.**

அருமைச்சீர் திருமணத்திற்கும், எழுதிங்கள்சீருக்கும் தேவையான அனைத்து பொருட்களையும் கொண்டு வந்துநியாயமான கட்டணத்தில் திருமணச்சீர், எழுதிங்கள்சீர் செய்து வைக்கின்றோம்.

## செல் : 94433 80159, 96881 81383

## நூல் நயம்

# கொங்கு மண்டல கிராமிய இலக்கியங்கள்

### சுதா சென்னியப்பன், கவிதா சென்னியப்பன்

கிராமத்து மனிதனின் வாழ்க்கை உணர்ச்சிகள் மிக்கது. அவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடு பாடல்கள். கிராமத்து வாழ்க்கையில் பாடல்களின் பங்கு வெகு அதிகம். கிராமத்தில் ஒரு குழந்தை பிறக்கும் போது தாயானவள் அக்குழந்தையை தாலாட்டு மூலம் வரவேற்கிறாள். அக்குழந்தை வளர்ந்து பருவ வயதை அடையும் போது காதல் வருகிறது. காதலின் வெளிப்பாடாக காதல் பாட்டும் உருவாகிறது. வேலை செய்யப் போகும் இடத்தில் தொழில் பாடல்கள் களைப்பைப் போக்குகின்றன. விழாக் காலங்களில் மனதின் மகிழ்ச்சியை கும்மி வெளிப்படுத்துகிறது. பின் மரணத்தின் போது ஒப்பாரி அவனை வழியனுப்புகிறது. நான் பிறக்கும் போது என் அன்னையானவள் தாலாட்டு மூலம் என்னை வரவேற்றாள். காலம் உருண்டது. இப்போது கிராமியப் பாடல்களே அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. இந்நூல் அவற்றை அழிவில் இருந்து மீட்டு புத்துணர்ச்சி அளிக்கும் என்றெண்ணுகிறேன். நான் காலஞ் செல்லும் போது என்னை ஒப்பாரி பாடல்கள் வழியனுப்பும் என்ற நம்பிக்கையுடன் விக்னேஷ் அந்துவன் வெளியீட்டு ஆசிரியர்.




ஆராரோ ஆரிரரோ
எங்கண்ணே ஆரடிச்சார் நீயழுவ
நீ அடிச்சாரைச் சொல்லுமடா
என் கண்ணே அழச்சுவந்து நாங்கேப்போ
என் கண்ணே உனைய அத்தையடிச்சாரோ
என் கண்ணே உனைய அரளிப்பூக் கையாலே
என் கண்ணே உனைய மாமென் அடிச்சாரோ
என் கண்ணே உனைய மல்லிகைப்பூ கையாலே
நீ அடிச்சாரைச் சொல்லுமடா
எங்கண்ணே அழச்சுவந்து நாங்கெப்போ
என் கண்ணான கண்ணுமணி
என் கண்ணே நீ கான மயிலுறங்கு

**விலை: ரூ.200**

**Title** : Kongu Mandala Gramiya Ilakiyangal
**Authors** : Sudha Chenniappan Kavitha Chenniappan
**Corrected by** : Vaishnavi Palanisamy, Karur
**Subject** : Tamil Literature
**Language** : Tamil
**Edition** : First Edition
**No. of Pages** : 240
**Published by** : Vignesh Eswaramurthi
4/826, Nanjappanagar, Kullampalayam (PO), Gobichettipalayam
**Contact** : 83440 80044


SIVAPRAKASAM.M
94437 45879
MANICKAVASAKAM
VECHICLES EMISSION MONITERING CENTRE
(AUTHORISED BY GOVERMENT OF TAMILNADU)
WE PROVIDE POLLUTION TEST FOR ALL PETROL AND DIESEL VECHICLES
इंडियनऑयल
IndianOil
IOC OUTLETNO 139-B,SANGANOOR ROAD NEAR (POLICE CHECKPOST
KAVUDAMPALAYAM COIMBATORE-641030 PH:0422-2966266MOB:7339655599


UNITED INDIA INSURANCE
BAJAJ Allianz
IFFCO-TOKIO
INSURANCE SERVICES
LIC
AARWIN ASSOCIATE SERVICE
WE PROVIDE INSURANCE AND ASSOCIATE SERVICE
H.P.C.L Co-Co. OUTLET AVINASHI ROAD
1047,AVINASHI ROAD,NEAR ANNA STATUE
(OPP.VODAFONE GALLERY)
COIMBATORE-641 018.
OFF-0422 2244445,94875 23879
90926 55599.


SUTHASUN EMISSION MONITORING CENTRE
(Authorised by Govt. of Tamilnadu)
WE PROVIDE POLLUTION TEST FOR ALL PETROL AND DIESEL VEHICLES
H.P.C.L Co-Co. OUTLET AVINASHI ROAD,
1047,AVINASHI ROAD,NEAR ANNA STATUE,
(OPP.VODAFONE GALLERY)
COIMBATORE-641 018.
OFF-0422 2244445,94875 23879,90926 55599.



# எலும்பு வலிமை இழப்பால் ஏற்படும் அவதி!

பத்மஸ்ரீ கொங்குமாமணி டாக்டர் வி.எஸ். நடராஜன்
முதியோர் நல மருத்துவர் சென்னை

எலும்பிலுள்ள பொருள் திணிவு (bone mass) குறையும்போது அது தன் வல்மையை இழக்கிறது. இதையே எலும்பு வலிமை இழத்தல் (osteoporosis) நோய் என்கிறார்கள். இந்தப் பிரச்சினை வந்துவிட்டால், சாதாரணமாக வழுக்கி விழுந்தால்கூட எலும்புமுறிவு ஏற்படும்.

நமது உடலானது எலும்புகளைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது. இளமையில் இது வேகமாக நிகழ்கிறது. வயதாகும்போது, நாம் இழக்கும் எலும்பு அடர்த்தியானது, புதிதாக உருவாவதைவிட அதிகமாக இருக்கிறது. எனவே, எலும்பானது வலிமையை இழக்கிறது.

பெண்களுக்கு இந்தத் தொல்லை அதிகம் ஏற்படுகிறது. குறிப்பாக மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் குறைவதால் எலும்பு எளிதில் பலவீனம் அடைகிறது. மாதவிடாய் சீக்கிரம் நின்றுவிடும் பெண்கள், மாதவிடாய் நிற்கும் காலத்தில் குறைந்த எடையுள்ள பெண்கள், கால்சியம் சத்துள்ள உணவைக் குறைவாக உண்ணுபவர்களுக்கு, ஸ்டீராய்டு மருந்துகளை உபயோகிப்பவர்களுக்கு மற்றும் தைராய்டு பிரச்னை உள்ளவர்களுக்கு இத்தொல்லை வர வாய்ப்புகள் அதிகம். பெற்றோரில் யாருக்காவது இந்தப் பிரச்னை இருந்தால், அவர்களின் பிள்ளைகளுக்கும் வரும்.

> “நம் உடலுக்குத் தினமும் 1300 மி.கி. கால்சியம் தேவை. சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள உணவை எடுத்துக்கொள்ளவும். உதாரணம்: ராகி, பால், கீரை, கோய்யாப்பழம், மீன், இறால், நண்டு மற்றும் உலர் பழங்கள்.”

### அறிகுறிகள்

ஆரம்பநிலையில் எதுவுமே தெரியாது என்பதுதான் இதில் பிரச்னையே இந்நோய் பல ஆண்டுகளாக மறைந்திருந்து, கடைசியில் எலும்பு முறிவு ஏற்படும்போதே வெளியில் தெரிய ஆரம்பிக்கும். கீழே விழாமலேயே, எவ்வித அடியும் படாமலேயே எலும்பு முறிவு ஏற்படுவதும் உண்டு. இடுப்பெலும்பு, முதுகெலும்பு மற்றும் மணிக்கட்டு ஆகிய இடங்களில்தான் எலும்பு முறிவு அதிகமாக ஏற்படும். எலும்பு அடர்த்தி குறைவதால், முதுகுவலி ஏற்படும். முதுகு வளைந்து, உயரம் குறையும். பல செயல்பாடுகளுக்கு மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை

உருவாகும். மனச்சோர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு.

*எப்படி கண்டுபிடிப்பது?*

எலும்பிலுள்ள பொருள் திணிவு சுமார் 30 - 50 சதவிகிதம் குறைந்தால்தான் எக்ஸ்ரே மூலம் கண்டறிய முடியும். இப்பொழுது டெக்ஸா ஸ்கேன் (Dexa scan) மூலம் இந்நோயை மிக எளிதாக ஆரம்பநிலையிலேயே கண்டறிய முடியும்.

*சிகிச்சைகள்*

சீக்கிரமே மாதவிடாய் நின்றவிட்டாலோ, ஸ்டீராய்டு மருந்துகளை மாதக்கணக்கில் எடுத்துக்கொண்டாலோ, இந்தப் பிரச்னை வருவதற்கு முன்பே டாக்டரிடம் ஆலோசிப்பது நல்லது. இந்தப் பிரச்னைக்கு பைப்பாஸ்போனேட்டுஸ் மற்றும் கால்சிட்டோனின் மாத்திரைகள் பரிந்துரைக்கப்படும். மாதவிடாய் நின்ற பெண்களுக்கு ஏற்படும் எலும்பு வலிமை இழத்தலுக்கு ஹார்மோன் மருந்து மூலம் சிகிச்சை அளிப்பார்கள். ஆனால், இதைத் தொடர்ந்து சாப்பிடுவதனால் கர்ப்பப்பை புற்றுநோய் வர வாய்ப்புகள் அதிகம். இதை தொடர்ந்து வெகுநாட்களுக்குச் சாப்பிட வேண்டி வரும்.

*தடுக்கும் முறை*

உடற்பயிற்சிகளினால் எலும்பை உறுதி அடையச் செய்ய முடியும். உதாரணம்: வேகமாக நடத்தல், சைக்கிள் ஓட்டுவது, நீந்துதல் மற்றும் ஆசனப்பயிற்சிகள். குறிப்பாக எடைதூக்கும் பயிற்சிகள் போன்றவை எலும்புகளுக்குப் பெரிதும் வலிமை கொடுக்கும்.

தினமும் குறைந்தது 50 நிமிடங்கள் சூரிய ஒளி உடலில் படுமாறு இருப்பதன் மூலம் வைட்டமின் டி கிடைக்கிறது. மீன், முட்டைக்கரு, கல்லீரல், பால் போன்றவற்றைச் சாப்பிடுவதாலும் கிடைக்கிறது. முடியாதவர்கள் வைட்டமின் டி 800 யூனிட் மாத்திரை எடுத்துக்கொள்ளலாம். இது எலும்பை உறுதிசெய்ய மிகவும் உதவும்.

நம் உடலுக்குத் தினமும் 1300 மி.கி. கால்சியம் தேவை. சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள உணவை எடுத்துக்கொள்ளவும். உதாரணம்: ராகி, பால், கீரை, கொய்யாப்பழம், மீன், இறால், நண்டு மற்றும் உலர் பழங்கள்.

மது மற்றும் புகைப்பழக்கம் எலும்புகளுக்கு ஆகாது. அவற்றை அறவே ஒழிக்க வேண்டும்.

காபியைக் குறைக்கவும். டீ அருந்துவதனால் எலும்பு பாதிப்பு ஏற்படுவதில்லை.

எடை குறைவாக இருந்தால், எலும்பு வலிமை இழக்கும். எடை அதிகமாக இருந்தாலும் எலும்பு முறிவு ஏற்படும். எனவே, உடல் எடையைச் சீராகப் பராமரிக்க வேண்டும்.

எலும்பு வலிமையிழத்தல் ஒரு தடுக்கக்கூடிய தொல்லையே.

## முதுமையை இளமையாக்கும் யோகா பயிற்சி

முதியோர்கள் தவறாமல் செய்யும் யோகா பயிற்சி மூலம் முதுமையை வென்று இளமையாக இருக்க முடியும். இதற்காக சென்னை தி.நகரில் உள்ள அட்லாண்டிஸ் ஹெல்த் சிட்டி மருத்துவமனையில் சுமார் 50 முதியோர்கள் கலந்து கொண்ட யோகா புகைப்பட படப்பிடிப்பு நிகழ்ச்சி 19/4/2025 அன்று நடந்தது. டாக்டர். எஸ். அபிராமி பிரேம்நாத், இயற்கை மருத்துவர் மற்றும் யோகா நிபுணர் யோகப் பயிற்சியை செய்து காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் செயல்முறைகளை நூல் வடிவிலும் மற்றும் வீடியோ வடிவிலும் டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் நல அறக்கட்டளை விரைவில் வெளியிட உள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு உதவிய டாக்டர் விஜயகுமார், இயக்குனர், அட்லாண்டிஸ் ஹெல்த் சிட்டி மருத்துவமனை அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.



அட்டை சொல்லும் சேதி

# வாகனப்புரட்சியை செதுக்கிய கவுண்டர்

# வேலுசாமி-மஹிந்திரா

*பெங்களூரு திரு என். செந்தில் (மேனாள் பொது மேலாளர் சாமுண்டீஸ்வரி சர்க்கரை ஆலை) அவர்கள் அனுப்பிய இணைய நேர்காணல் தகவலைத் தொகுத்தவர் வீ. க. செல்வக்குமார்*

அரிஸ்டாட்டில் சாக்ரடீஸ் பிளாட்டோ என்று தான் அறிஞர்களை வரிசைப்படுத்திக் கூறுவார்கள். ஆனால் நம்முடைய தமிழ் மண்ணில் பிறந்த ஆகச்சிறந்த அறிஞர்கள் திருவள்ளுவர், கணியன் பூங்குன்றனார் போன்றவர்களைவிட அறிவாற்றல் மிக்கவர்களா அவர்கள்? என்று வினவுகிறார் எஞ்சின் மேன் ஆர். வேலுசாமி அவர்கள்.

**"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்**
**ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?"**

என்ற பாடல் வரிகளை போல் அவர் யோசித்து இருக்கிறார் அதற்கு ஏற்றார் போல் அவரது நிறுவனத் தலைவர் ஆனந்த் மஹிந்திரா அவர்கள் அவருக்கு ஊக்கம் அளித்திருக்கிறார்.

அதன் வெளிப்பாடுதான் இன்று நம் நாட்டில் உலா வரும் ஐரோப்பிய, ஜப்பான் நாட்டு தொழில்நுட்பத்திற்கு இணையான மஹிந்திரா வாகனங்கள்!

தமிழ்நாட்டில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் தான் பெண்கள் இப்பொழுது நல்ல முறையில் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் எங்களுடைய மின்சார வாகனங்கள் உற்பத்தித்துறையில், மின்னணு பொறியியல் வல்லுனர்களாக சுமார் 200 மகளிரை பணியில் அமர்த்தி இருக்கிறேன். கடந்த 90களில் இருந்து பெண்களின் கல்வித்தரம் மிக மிக உயர்ந்திருக்கிறது அதற்கு நம்முடைய தமிழ்நாட்டில் நிலவும் சமூக கட்டமைப்பு தான் காரணம் என்று கருதுகிறேன் என்று கூறுகிறார் வேலுசாமி அவர்கள்.

அனைவரையும் அரவணைத்து செல்லும் தலைமைப் பண்புக்கு உதாரணமாக திகழ்கிறார் திரு வேலுசாமி அவர்கள்.

அவர் தன்னுடன் பணிபுரியும் இரு தொழில்நுட்ப வல்லுனர்களை மிகவும் வியந்து பாராட்டுகிறார் அந்த நேர்காணலில்! ஆமாம் விருதாச்சலம் பக்கத்தில், ஏழ்மையான பின்னனியில் இருந்து வந்த திரு.ராஜ்குமார் என்பவரையும் அதேபோல உதகையில் அவலாஞ்சி பக்கத்தில் இருந்து வந்த திரு. நந்தகுமார் என்பவரையும். அதுவும் உதகை நண்பர் சொல்லும் கருத்தை அப்படியே நான் ஏற்றுக்கொள்வேன் என்று அவர் மீது அபார நம்பிக்கை கொண்டுள்ளார். தம் கீழ் பணியாற்றுவோரை மனம் திறந்து பொதுவெளியில் பாராட்டுவது என்பது அவரது பரந்த மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

எங்களுக்குள் உரையாடும் பொழுது தமிழில் தான் பேசிக்கொள்வோம். கருத்தரங்குக்கு சென்றால் மட்டும் ஆங்கிலத்தில் பேசுவோம். ஆனால் எங்களுடைய உரையாடல் எல்லாம் இங்கு தமிழில் இருக்கும், சிந்தனை தமிழில் தான் இருக்கும். தாய்மொழி சிந்தனை காரணமாக அவர்கள் அறிவு அவ்வளவு அபாரம் என்று பாராட்டுகிறார்.

மஹிந்திரா நிறுவனம் தன்னுடைய கார் தயாரிப்பு தொழிற்சாலையை நாசிக்கில் வைத்திருந்தாலும், அதனுடைய ஆராய்ச்சிப் பிரிவை சென்னையில் மஹிந்திரா சிட்டியில் தான் வைத்திருக்கிறாகள். கிட்டத்தட்ட 6 ஆயிரம் பேர் பணிபுரிகிறார்கள் என்றால் என்ன காரணம்? இங்குள்ள நம்முடைய பகுதியில் உள்ள சிறந்த கல்வி கட்டமைப்பினால் மிகச் சிறந்த இளைஞர்கள் அதாவது அறிவாளிகள், உழைப்புக்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர்கள் இங்கே கிடைக்கிறார்கள் என்ற ஒரு சிந்தனை தான் திரு. ஆனந்த் மஹிந்திரா அவர்களை இங்கே சென்னையில் ஆராய்ச்சி மையத்தை ஆரம்பிக்கத் தூண்டியுள்ளது.

பிஎம்டபிள்யு எக்ஸ்3, எக்ஸ் 5 மாடல்களை மனதில் கொண்டே நாங்கள் எங்களுடைய xuv 700 என்ற அந்த மஹிந்திரா காரை






உருவாக்கினோம். அது 2022 இல் இந்தியாவின் சிறந்த காருக்கான ஐகாட்டி விருதைப் பெற்றது.

மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அதற்காக மிகக் கடுமையாக உழைத்தோம் எங்களுடைய இலக்கு ஐரோப்பிய மாடல் காருக்கு இணையாக வர வேண்டும் என்பதுதான் அந்த இலக்கை அடைந்து வெற்றி பெற்றோம் என்கிறார்.

அந்த வெற்றியின் மூலம், **“வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றவை எல்லாம் பிற”** என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்கிறார் திரு. ஆர் வேலுசாமி அவர்கள்.

கிராமப்புறங்களில் இருந்து வரும் இளைஞர்கள் முதல் தலைமுறை பட்டதாரிகள் அல்லது அவர்கள் பெற்றோர்கள் பட்டதாரிகளாக இருந்தாலும் இவர்கள் முதல் தலைமுறையாக பணிக்கு செல்பவர்கள். இவர்களிடம் நேர்மை, நாணயம், உண்மை இருப்பதை கண்டறிந்து அவர்களை பணியமர்த்தினேன். அவர்கள் தான் என்னுடைய சக ஆராய்ச்சிக்கு ஒத்துழைப்பு தந்து, இந்த சாதனையை அடைய உதவினார்கள் என்று தன்னுடைய குழுவை பாராட்டுகிறார்.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட்டின் (M&M Ltd) வாகன தொழில்நுட்ப மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு துறைத் தலைவராகவும், மஹிந்திரா எலெக்ட்ரிக் ஆட்டோமொபைல் லிமிடெட்டின் (MEAL) இணை மேலாண்மை இயக்குநராகவும் உள்ளார்.

மேலும், மஹிந்திரா ரேசிங் UK மற்றும் PF ஹோல்டிங்ஸ் B.V. நிறுவனங்களின் இயக்குநர் குழுவிலும் உறுப்பினராக உள்ளார்.

அத்துடன், மஹிந்திரா குழுமத்தின் நிர்வாக குழுவிலும் (Group Executive Board) உறுப்பினராக உள்ளார்.

வேலுசாமி. ஆர் அவர்கள் 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட அனுபவமிக்க வாகனத் துறைத் தலைவராக விளங்குகிறார். மஹிந்திராவின் வாகன மேம்பாட்டு நோக்கத்தை வடிவமைத்து, அதன் வாகன தயாரிப்புத் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றங்களை அடைய வழிகாட்டியவர்.

1996-ம் ஆண்டு மஹிந்திராவில் பவர் டிரெயின் பிரிவில் பணியாற்ற தொடங்கிய அவர், அதில் எம்-ஹாக் எனும் புரட்சி செய்யப்பட்ட என்ஜின் தொடரை உருவாக்கி, செயல்திறன், மிடிவளர்ச்சி மற்றும் நீடித்த தன்மை ஆகிய துறைகளில் புதிய தரநிலைகளை உருவாக்கினார்.

அவரது தலைமையிலான வளர்ச்சி மற்றும் வெளியீட்டின் கீழ், மஹிந்திராவின் தார், XUV700, ஸ்கார்பியோ-என் மற்றும் சமீபத்திய XUV3XO மற்றும் தார் ராக்ஸ் போன்ற புகழ்பெற்ற வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தங்களது வகைப் பிரிவுகளில் புதிய வரையறைகளை உருவாக்கி உள்ளன.

2024 நவம்பரில் அறிமுகமான மஹிந்திராவின் மின்சாரம் வழியிலான எஸ்யுவிக்கள் XEV 9C மற்றும் BE 6 ஆகியவற்றை அவர் மேம்படுத்தியும் அறிமுகப்படுத்தி யும் உள்ளார். இவை இந்திய வாகனத் துறையில் புதிய அளவுகோல்களை ஏற்படுத்தியுள்ளன.

தயாரிப்பு மேம்பாட்டைத் தாண்டி, அவர் மஹிந்திரா ரேசிங் UK மற்றும் PF ஹோல்டிங்ஸ் B.V. நிறுவனங்களின் இயக்குநர் குழுவிலும் இருக்கிறார். அத்துடன், இந்திய வாகன ஆராய்ச்சி அமைப்பின் (ARAI) ஆட்சி

“அவர் மஹிந்திரா எலெக்ட்ரிக் ஆட்டோமொபைல் லிமிடெட்டின் இணை மேலாண்மை இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார். 2024 நவம்பரில் அறிமுகமான மஹிந்திராவின் மின்சாரம் வழியிலான எஸ்யுவிக்கள் XEV 9C மற்றும் BE 6 ஆகியவற்றை அவர் மேம்படுத்தியும் அறிமுகப்படுத்தியும் உள்ளார்.”

மன்றத்தில் துணைத் தலைவராகவும், மேம்பட்ட வாகன ஆராய்ச்சி மையத்தின் (CAAR) ஆட்சி மன்ற உறுப்பினராகவும், பாதுகாப்பு ஒழுங்குமுறை மீதான கவனம் கொண்ட SI-AM-இன் CMVR குழுவின் தலைவராகவும் செயல்படுகிறார்.

வேலுசாமி அவர்கள் மெட்ராஸ் பல்கலைக்கழகத்திலிருந்து B.Sc பட்டமும், அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆட்டோமொபைல் இன்ஜினியரிங்கில் B.Tech பட்டமும் பெற்றுள்ளார். மேலும், வாட்டன் பிஸினஸ் ஸ்கூல், ஹார்வர்டு பல்கலைக்கழகம் மற்றும் மிச்சிகன் ராஸ் பிஸினஸ் ஸ்கூல் ஆகியவற்றின் நிர்வாகப் பயிற்சி திட்டங்கள் மூலம் தனது தலைமையுரிமை மற்றும் மூலதனத் திறன்களை மேம்படுத்தியுள்ளார்.

நாமக்கல் அருகில் உள்ள ஆண்டிபப்பட்டிப் புதூரில் பிறந்த அவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியை தமிழ் வழியில் அரசு பள்ளியில் கற்றார். ஆறாம் வகுப்பு படிக்கும் போதிலிருந்தே அவருக்கு அறிவியலிலும் கணக்கிலும் ஆர்வம் அதிகம். அந்த ஆர்வம் காரணமாக ஆறாம் வகுப்பு கணிதப் பாடங்களை முடித்துவிட்டு 7,8,9 ஆம் வகுப்பு கணக்கு பாடங்களையும் அந்த ஆண்டிலேயே முடித்து விடுவாராம். அதன் காரணமாக அவருடைய வகுப்பு ஆசிரியர்கள் இவர் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே ஒன்பதாம் வகுப்புக்கு சென்று கணிதப் பாடம் நட நடத்த சொல்வார்களாம். இயல்பிலேயே அவருக்கு கணிதத்தின் மீதும் அறிவியல் மீதும் மிகுந்த நாட்டம் இருந்திருக்கிறது.

தன்னுடைய அக்காள்கள் இருவரும் தமக்குக் கொடுத்த புத்தகத்தை வைத்துத்தான் தான் பள்ளியில் படித்ததாக பெருமையோடு கூறுகிறார். கீரம்பூர் பள்ளியில் 500 க்கு 410 மதிப்பெண் பெற்று முதல் மாணவனாக வந்திருக்கிறார். பின்னர் கல்லூரிப் படிப்பை பரமத்தி வேலூரில் முடித்துவிட்டு டி.என்.ஏ. ஆராய்ச்சியில் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்ற நாட்டத்தில் இருந்திருக்கிறார். ஆனால் அவருடைய தந்தையாரோ நாமக்கலில் ஆட்டோமொபைல் தொழில் இருப்பதால், நீ உனக்கு எம்.ஐ.டி.யில் வந்த அழைப்பை ஏற்று ஆட்டோமொபைல் துறையில் படி என்று அறிவுறுத்திய காரணத்தால் அங்கே சேர்ந்திருக்கிறார். அதில் ஐசி இன்ஜின் பாடப்பிரிவு அவருக்கு மிகவும் பிடித்தமாக இருந்திருக்கிறது.

**“மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட்டின் (M&M Ltd) வாகன தொழில்நுட்ப மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு துறைத் தலைவராகவும், மஹிந்திரா எலெக்ட்ரிக் ஆட்டோமொபைல் லிமிடெட்டின் (MEAL) இணை மேலாண்மை இயக்குநராகவும் உள்ளார்.**
**மேலும், மஹிந்திரா ரேசிங் UK மற்றும் PF ஹோல்டிங்ஸ் B.V. நிறுவனங்களின் இயக்குநர் குழுவிலும் உறுப்பினராக உள்ளார். அத்துடன், மஹிந்திரா குழுமத்தின் நிர்வாக குழுவிலும் (Group Executive Board) உறுப்பினராக உள்ளார்.”**

தனது தந்தையார் வானத்தை அண்ணாந்து ஆராய்ச்சி செய்து பார் என்று என்று சிறுவயதில் கூறியதை உதாரணமாக எடுத்துக்கொண்டு எப்பொழுதுமே ஆராய்ச்சி மனப்பான்மையுடன் இயற்பியலில், வானியலில் மிகுந்த நாட்டத்துடன் இருந்திருக்கிறார். அதுதான் இஞ்சின் ஆராய்ச்சி துறையிலும் அவர் ஈடுபட காரணமாக அமைந்திருக்கிறது. அதன் பின்னர் இவரை பணிக்கு எடுக்கும் பொழுது மகிந்திரா நிறுவனத்தின் உயர் பொறுப்பில் இருந்த மிகச்சிறந்த ஆராய்ச்சியாளர் ஒருவர், ஐஐடியில் படித்தவர், அவர்தான் நேர்காணல் எடுத்து இருக்கிறார். இவருடைய திறமையை கண்டு வியந்து இவரை வெளிநாட்டிற்கு பயிற்சிக்கு அனுப்ப வேண்டும் என்று உன்னிடம் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார். அப்பொழுது இவருக்கு ரேஷன் கார்டுக்கும் பாஸ்போர்ட்டுக்கும் வித்தியாசம் தெரியாமல், இருக்கிறது என்று கூறிவிட்டார். அது தெரிந்தும் அவரை எள்ளி நகையாடாமல் இருந்திருக்கிறார் அந்த உயர் அதிகாரி.

**“உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெரும் தேருக்கு அச்சாணி அன்னார் உடைத்து”**
**என்ற குறளுக்குப் பொருளை அறிந்திருப்பார் போலும்!**
**எனவேதான் இன்று உருள் பெரும் தேர்களாக இருக்கும் மஹிந்திரா கார்களுக்கு இவர்தான் அச்சாணியாக இருப்பார் என்று உணர்ந்து கண்டுபிடித்து இருக்கிறார்.**

சிறுவயதில் இருந்தே இவருக்கு மனிதரிடம் ஏன் ஏற்றத் தாழ்வு இருக்கிறது என்ற சிந்தனை! அவர் அன்னை அன்பாக இவரை வழிநடத்தி இரக்க குணத்தை போதித்திருக்கிறார். அதைப்பற்றி அவர் நினைவு கூரும் பொழுது,

**“அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம், தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம். இரண்டும் இருந்தால் பேரைவாங்கலாம். பேரைவாங்கினால் ஊரை வாங்கலாம்”**

என்ற பாடல் வரிகள் தான் நினைவுக்கு வருகிறது.

காருக்கு எஞ்சின் தான் இதயம். அந்த இதயத்தை வடிவமைப்பதில் மூளையாக செயல்படும் **மணியன் குல மாணிக்கம், நாமக்கல் தந்த நல் முத்து** திரு. ஆர். வேலுசாமி அவர்கள் நமது இந்த மாத இதழ் அட்டையை அலங்கரிப்பது நமக்கெல்லாம் பெருமைதானே!

# குடும்ப விழா



கொங்கு நலச்சங்கம் மல்ல சமுத்திரம், முதலாம் குடும்ப விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. நமது சங்கத்தின் துணைத்தலைவர் திரு.V.P.வீரப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கிளாம்பாடி கிராமம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 30.04.2025 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

# வாழ்த்துகிறோம்...



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் கொங்கு நாடு அறக்கட்டளையின் பொருளாளர் திரு.வீ.கே. செல்வகுமார் *(Founder & Managing Director of Chennai Mettex Lab Pvt Ltd)* அவர்களுக்கு ஈரோடு *GIB (Gounders in Business)* சார்பாக *20-04-25* அன்று ★"கொங்கு தொழில் மாமணி விருது" *GEM* மருத்துவமனை தலைவர் டாக்டர் திரு.சி. பழனிவேலு மற்றும் திருப்பூர் மெஜஸ்டிக் குழும தலைவர் திரு கந்தசாமி ஆகியோர்களால் வழங்கப்பட்டது.



சேலம் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உடைய *2025 2028* ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு.வி.கே.செல்வகுமார் அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்கள்


PETROCOAT
STEP UP
YOUR INDUSTRY
WITH SUPERIOR
Performance
Flooring
BENEFITS
Attractive Floor Surface
Easy to clean
Environmental Friendly
Fast Application
Resistant to Chemicals
KEEP YOUR FLOORS PROTECTED
+91 99941 75000
www.petrocoat.in


PETROCOAT
UNLEASH THE POTENTIAL
OF YOUR FLOORS WITH
EPOXY
CONTACT US
+91 99941 75000
www.petrocoat.in



# அத்திக்கடவு - அவிநாசி திட்டம் உருவான வரலாறு

## அன்று போட்ட விதை இன்று விருட்சமானது

கொங்கு மக்களின் 60 ஆண்டுகளை கடந்த தொடர் போராட்டத்தின் விளைவாக உருவான அத்திக்கடவு -அவிநாசி நீர் செறிவூட்டும் திட்டத்துக்கு மறைமுகமாக ஒரு விதையை தூவிச் சென் றது, ஆங்கிலேயே பொறியாளர் ஆர்தர் காட்டன் என்பது தான் வியப்பு.

"எங்களுக்கே குடிக்க நீரில்லை... எங்கள் சந்ததிக்கு எங்கிருந்து நீர் கிடைக்கும்?"விடை தெரியாத இந்த கேள்வியோடு, வான் மழையையும், நிலத்தடி நீரையும் மட்டுமே நம்பி வாழ்ந்து வந்தனர் மேட்டுப்பாளையம், அன்னூர், திருப்பூர், சூலூர், சத்தியமங்கலம், கோபி, பெருந்துறை, அவிநாசி சுற்றுவட்டார மக்கள்.

ஆயிரத்து 600 அடிக்கும் கீழ் தோண்டினால் தான் நிலத்தடி நீரை உறிஞ்ச முடியும் என்கிற, பேராபத்து நிலை.

ஊர் தோறும் குளம், குட்டைகள் நிரம்ப இருப்பினும், அந்தந்த பருவத்தில் பெய்யும் மழைநீரில் மட்டுமே அவை நிரம்பி. ததும்பும். மழை தவறினால், வறட்சி தாண்டவமாடும்; குடிநீருக்கு, அல்லாடும் நிலை உருவாகும்.

இப்படியான சூழலில் தான், தற்போது, அத்திக்கடவு - அவிநாசி நீர் செறிவூட்டும் திட்டம் வாயிலாக, குளம், குட்டைகள் நிரம்பி ததும்பி, வறண்ட வானம் பார்த்த மானாவாரி நிலங்களில் கூட செழுமை ததும்பும் பணப்பயிர் பயிரிடும் சூழல் உருவாகியிருக்கிறது.

**ஆங்கிலேய ஆட்சியில் விதை**

கொங்கு மக்களின் 60 ஆண்டுகளை கடந்த தொடர் போராட்டத்தின் விளைவாக உருவான அத்திக்கடவு -அவிநாசி நீர் செறிவூட்டும் திட்டத்துக்கு மறைமுகமாக ஒரு விதையை தூவிச் சென் றது, ஆங்கிலேயே பொறியாளர் ஆர்தர் காட்டன் என்பது தான் வியப்பு.

கடந்த, 1834ல், மெட்ராஸ் ரெஸிடென்சியின் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளராக இருந்த ஆங்கிலேயர் சர் ஆர்தர் காட்டன் என்பவர் தான், மேல் பவானி மற்றும் கீழ் பவானி திட்டத்தை நிறைவேற்ற திட்டமிட்டார். பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ஆரோக்கியசாமி முதலியார், இந்த இருதிட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இரு திட்டங்களில் எதை முதலில் எடுப்பது; திட்டத்தின் வாயிலாக மானாவாரி நிலங்கள் எந்தளவு செழுமை பெறும்; அதன் வாயிலாக விவசாயிகளின் பொருளாதாரம், வாழ்க்கை சூழல் எந்தளவு மாறும் என்பது போன்ற விரிவான திட்ட அறிக்கையை தயாரித்தனர்.

நாடு சுதந்திரம் அடைந்த பின், தமிழக






சட்டசபையில், ஆங்கிலேயர் ஆட்சியில் திட்டமிடப்பட்ட கீழ் பவானி, மேல் பவானி பாசன திட்டம் குறித்த விவாதம் அனல் பறந்தது.

**திட்டத்துக்கு வித்திட்டவர்**

அத்திக்கடவு-அவிநாசி திட்ட போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பிரபு கூறியதாவது:-

ஆங்கிலேய பொறியாளர் ஆர்தர் காட்டன் முன்னெடுத்த கீழ், மேல் பவானி திட்டம் குறித்த ஆவணங்கள், அரசு காப்பகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

காமராஜர் ஆட்சியில், 1955-ல் கீழ் பவானி பாசன திட்டம் கொண்டு வரப்பட்டது. மேல் பவானி பாசன திட்டத்துக்கு சா;தியக்கூறு இல்லை என முடிவெடுக்கப்பட்டது, திட்டம் கைவிடப்பட்டது.

இத்திட்டம் வந்திருந்தால், சோமனூர், பல்லடம், திருப்பூர் பகுதிகள் செழித்திருக்கும். அந்த வகையில் தான் வரைபடமும் தயாரிக்கப்பட்டிருந்தது.

நாடு சுதந்திரம் அடைந்த பின், முதல் ஐந்தாண்டு திட்டத்தில்(1951-1956). வேளாண்மை, மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

குந்தா அணை சார்ந்த நீர் மின்நிலையங்கள் உருவாக்க, காமராஜர் ஆட் சியில் கனடா மற்றும் இந்திய பொறியாளர்கள் ஆய்வு மேற்கொண்டு திட்டம் வகுத்தனர்; தமிழக அரசு, செயல்படுத்தவும் செய்தது.

கடந்த, 1937ல், அவிநாசியில் இருந்து காங்., கட்சி சார்பில் எம்.எல்.ஏ.,வாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாரப்ப கவுண்டர், சட்ட சபைக்குள் நுழைகிறார். 1962 தேர்தலிலும் வெற்றி பெறுகிறார். 1937ல் தான் தி,மு.க., சார்பில் வெற்றி பெற்ற கலைஞர் கருணாநிதியும் சட்டசபைக்குள் நுழைகிறார். அப்போதே இருவருக்கும் நல்ல நட்பு இருந்துள்ளது.

குந்தா பகுதியில் நீர்மின் உற்பத்திக்கு போக, வெளியெறும் கழிவு நீரை அவிநாசியில் உள்ள குளம், குட்டைகளுக்கு திருப்பிவிடவேண்டும் என, சட்டசபையில் வலியுறுத்ததுவங்கினார் மாரப்ப கவுண்டர். அப்போதைய முதல்வர் காமராஜரை அழைத்து வந்து, திட்டத்தை வலியுறுத்தினார்.

அப்போது அவர் எழுப்பிய குரல் தான், இன்று, 2,000 கோடி ரூபாயில், அத்திக்கடவு - அவிநாசி நீர் செறிவூட்டும் திட்ட மாக உயிர் பெற்றிருக்கிறது.

இவ்வாறு, அவர் கூறினார்.



மாரப்ப கவுண்டர்



ஆர்தர் காட்டன்

## தலைமுறை செழிக்கும்

முன்னாள் எம்.எல்.ஏ., மாரப்ப கவுண்டர் மகன் வேலுசாமி கூறியதாவது: அத்திக்கடவு - அவிநாசி திட்டத்துக்கு என் தந்தை மாரப்பகவுண்டர், கடந்த, 1957ல் சட்டசபையில் குரல் கொடுத்தார். 60, 70 ஆண்டுகள் கழித்து வரும் தலைமுறை பயன்பெற வேண்டும்; அவர்கள் தனது பெயரை சொல்ல வேண்டும் என்பதற்காக அவர் இந்த கோரிக்கையை முன்னெடுக்கவில்லை. தனது காலத்தில் திட்டம் வர வேண்டும்' என, அவர் நினைத்தார். என் தந்தை முன்னெடுத்த கோரிக்கையை நானும், பலரும் தொடர்ந்து கேட்கும் வாய்ப்பு அமைந்தது, திருப்தியளிக்கிறது.

அவிநாசி, குன்னத்தூர், சேவூர், அன்னூர், பெருமாநல்லூர் போன்ற இடங்களில் ஜாதி. மதம், இனம், மொழி என எந்தவொரு பாகுபாடும் இல்லாமல், 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மேற்கொண்ட உண்ணாவிரதம், அவர்களுக்கு அனைத்து தரப்பு விவசாய அமைப்பினர் மற்றும் அரசியல் கட்சியினர் வழங்கிய ஆதரவின் காரணமாகத்தான், இத்திட்டம், அரசியல் முக்கியத்துவம் பெற்றது: அரசும் நிறைவேற்றியது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தியாகி தீரன் சின்னமலை பிறந்தநாள் விழாக் காட்சிகள்




கிண்டியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்



ஓடா நிலையில் அதிமுக நிர்வாகிகள்




கிண்டியில் மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்






சென்னை கொங்கு சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்




பாமக சார்பில் கௌரவத் தலைவர் ஜி.கே.மணி

# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

பெ.தூரன்



[3]

## பாட்டியின் வரவேற்பு!

அவர்கள் எதிர் பார்த்தது போல் பாட்டி தள்ளாத கிழவியாய் இருக்கவில்லை. விவசாயத்தில் பல ஆண்டுகள் ஈடுபட்டு உழைத்ததால் அவள் உடம்பு நல்ல வலிமையோடு இருந்தது. தலைமட்டும் நரைத்திருந்தது. வாயிலே பல் இல்லை. இருந்தாலும் அவள் ஆரோக்கியமாக இருந்தாள்.

"கண்ணுகளா, வாங்க" என்று கூறிக்கொண்டே அவள் அன்போடு எல்லாரையும் வரவேற்றாள். அவள் சிரிக்கும் போது அவளுடைய பொக்கை வாயைக் கண்டு மூவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். வந்தது முதற்கொண்டே அந்த வீட்டில் அவர்கள் விருப்பம்போலக் குஷியாக இருக்கலாம் என்று மூவரும் நினைக்கும்படி பாட்டி செய்துவிட்டாள்." கண்ணுகளா, முதல்லே பல்தேய்த்துக் கொண்டால் காப்பி தயாராக இருக்கிறது. காப்பி சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்" என்றாள் பாட்டி.

**தன்னம்பிக்கைச் சிந்தனை**

முடியாததை முடிக்கும் பொழுதுதான்
முயற்சிக்கு முடி சூட்டு விழா நிகழ்கிறது!

*-சிந்தனைக் கவிஞர் கவிதாசன்*



## தன்னம்பிக்கைச் சிந்தனை

உழைத்துக் கொண்டிருக்கிற
தேனீக்களுக்கு
கவலைப்படுவதற்கும்
நேரமில்லை,
பிறரை
காயப்படுத்துவதற்கும்
நேரமில்லை!
—சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்



“கண்ணுகளா, அதோ அந்தக் கிணற்றில் வாளியை விட்டு ஜலம் இழுத்துக் கொள்ளுங்கள்” என்றாள் பாட்டி.

“கண்ணுப் பாட்டி, இங்கே குழாய் எல்லாம் இல்லையா” என்று கேட்டான் சுந்தரம்.

“அதென்னடா எனக்குக் கண்ணுப் பாட்டி என்று பெயர் போட்டு விட்டாய்?” என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் பாட்டி.

“பாட்டி, நீங்கள் எங்களை அன்போடு கண்ணுகளா, கண்ணுகளா என்று இதற்குள் பலதடவை சொல்லிவிட்டீர்கள். நாங்களும் உங்களைக் கண்ணுப்பாட்டி என்றே அழைக்க ஆசைப்படுகிறோம்” என்றான் சுந்தரம்.

இதைக் கேட்டுப் பாட்டியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கிவிட்டது. “சரி அப்படியே கூப்பிடுங்கள்” என்று அவள் பதில் சொல்லிவிட்டு “குறும்புக்காரப் பயல்” என்று சுந்தரத்தின் கன்னத்தை மெதுவாகத் தட்டிக்கொடுத்தாள்.

“பாட்டி, உங்களுடைய பெயரை இங்கே வருகின்ற அவசரத்தில் அம்மாவிடம் கேட்க மறந்தே போனோம். இந்தக் கோமாளி வைத்த பெயர் எனக்கும் பிடிக்கிறது” என்றாள் கண்ணகி. தங்கமணி அங்குமிங்கும் ஆராயத் தொடங்கினான். சங்ககிரி அவனுடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. திப்பு சுல்தான் கோட்டைச்சுவர்களைக் காணவேண்டும் என்று அவன் துடித்துக் கொண்டிருந்தான்.

ஜின்கா கிணற்றுச் சுவர் மேல் தாண்டிக் குதிப்பதும், பக்கத்தில் நின்றுகொண்டிருந்த எருமை மாட்டின்மேல் ஏறி விளையாடுவதுமாக இருந்தது.

எல்லாரும் காப்பி அருந்தத் தொடங்கினர். ஜின்காவும் தங்கமணி அருகில் அமர்ந்து கொண்டது.

“தங்கமணி, அந்தக் குரங்கு காப்பி குடிக்குமா?” என்று கேட்டாள் பாட்டி.

“இந்தக் குரங்கு என்னவெல்லாம் செய்யுமோ அவையெல்லாம் அந்த ஜின்கா குரங்கும் செய்யும்” என்று சுந்தரம் தங்கமணியைத் தொட்டுக் காட்டிக்கொண்டு பேசினான்.

எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். ஜின்கா மேஜை மேல் ஏறிநின்று ஜிங் ஜிங் என்று குதித்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது.

“நீங்கள் எல்லாம் வந்தது எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. இந்த வீட்டில் இப்படி சிரிப்பொலியைக் கேட்டு எத்தனையோ வருஷம் ஆகிவிட்டது. குழந்தைகள் எல்லாம் இப்படித் தான் சிரித்துக் கொண்டு சந்தோஷமாக இருக்கவேணும்’ என்றாள் பாட்டி.

[4]

# தங்கமணியின் ஆர்வம்!

பாட்டிக்கு ஒரே மகன்தான் உண்டு. அந்த மகனும் உத்தியோகம் பார்ப்பதற்காக பம்பாய் சென்று விட்டார்.

அவர் தம் குடும்பத்தோடு இங்கு வந்து தங்கி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது அவருக்கு விடுமுறையே கிடைப்பதில்லையாம். பாட்டி தனியாகவே விவசாயம் செய்து கொண்டிருக்கிறாள்.

அன்றும் அதற்கு அடுத்த ஐந்து நாளும் மூவரும் கண்ணுப் பாட்டியின் விவசாயப் பண்ணைக்குப் போய் அங்கு நடக்கின்ற வேலைகளையெல்லாம் ஆச்சரியத்தோடு கவனித்தார்கள், அதுவே அவர்களுக்குப் புதிய அனுபவமாக இருந்தது. விவசாயப் பண்ணையை அவர்கள் முன்பு பார்த்ததில்லை.

ஆனால் தங்கமணியின் ஆர்வமெல்லாம் சங்ககிரி மலையைப் பார்க்க வேண்டும் என்பதிலேயே இருந்தது. பண்ணையில் வேலை செய்யும் ஒவ்வொருவரையும் தங்கமணி அந்த மலையைப் பற்றியும் அங்குள்ள திப்புசுல்தான் கோட்டையைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டான்.



அவர்களிடமிருந்து அவன் தெரிந்து கொண்ட செய்திகள் அடுத்த பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன.

**“தன்னம்பிக்கைச் சிந்தனை”**

விமர்சனங்கள் முகம் பார்க்கும்
கண்ணாடி போன்றவை.
முகத்தைச் சரிசெய்வதா?
கண்ணாடியை உடைப்பதா?
என்பது அவரவர் விருப்பம்.

-சிந்தனைக் கவிஞர் கவிதாசன்


**12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் கையேடு**

**மேலும் தகவல்களுக்கு இந்த QR-ஐ பயன்படுத்தி அறிந்து கொள்ளலாம்**

## தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்!

# ஈரோடு கோட்டை



(நன்றி : கொங்கு மாமணி புலவர் செ. இராசு)

ஈரோட்டில் நடுநாயகமாக கோயில்கள் உள்ள பகுதிக்கு இன்றும் கோட்டை என்ற பெயர் வழங்குகிறது. முன்பு அப்பகுதியில் பெரிய மண் கோட்டை இருந்தது. கடைவீதியில் நேதாஜி சாலை மணிக்கூண்டுக்கும் கிழக்கே உள்ள பகுதிக்கு பேட்டை என்றும் மேற்கே உள்ள பகுதிக்கு கோட்டை என்றும் பெயர் வழங்கியது. தந்தை பெரியாரின் தந்தை மண்டி ஈ.த. வெங்கட்ட நாயக்கர் 1904 ஆம் ஆண்டு ஈரோடு பெருமாள் கோயிலில் வெட்டிய கல்வெட்டில் தாம் பேட்டையில் இருப்பதாக கூறுகிறார். பிரப் சாலையில் உள்ள பெரிய மாரியம்மன் கோயில் கோட்டை மாரியம்மன் கோயில் என்று அழைக்கப்பட்டது. 17ஆம் நூற்றாண்டு பாடல் ஒன்று மேல் கரை பூந்துறை நாட்டில் ஈரோடு, பெருந்துறை, கொளாநல்லி ஆகிய மூன்று ஊர்களில் கோட்டைகள் இருப்பதாகக் கூறுகிறது.

மதுரை மன்னன் திருமலை நாயக்கர் காலத்தில் 23 கோட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. அவற்றில் ஈரோடு கோட்டையும் ஒன்று என பட்டியல் கூறுகிறது.

12.6.1761 அன்று எழுதப்பட்ட ஒரு ஆவணத்தில் ஈரோடு கோட்டையில் தளவாய், கந்தாசாரம், அட்டவணை, சேனை பாகம், சேர்வைக்காரர் முதலிய அலுவலர்கள்

இருந்ததாக கூறப்படுகிறது.

1779 இல் மைசூர் ஹைதர் அலிக்கும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் சமரசம் செய்ய தஞ்சையில் இருந்து பயணம் செய்த பாதிரியார் கிறிஸ்டியன் ஃப்ரடரிக் ஸ்வார்ட்ஸ் ஈரோடு வழியாகச் சென்றவர் ஈரோடு கோட்டை பற்றிச் சிறப்புடன் குறிப்பிடுகிறார்.

முன்பு கோட்டை தான் ஒரு அரசின் பலம். கோட்டை வீழ்ந்தால் கோட்டைக்குரிய அரசும் வீழும். அதனால் தான் தோல்வி அடைந்தவனை கோட்டை விட்டான் என்று கூறுகிறோம்.

## அகழி மேடாகி அகில் மேடு வீதி

1878 ஆம் ஆண்டு ஏற்பட்ட தாது வருட பஞ்ச நிவாரண பணிக்காக இடிக்கப்பட்ட பெரிய மண் கோட்டை மண்ணை கோட்டையை சுற்றிலும் வளைந்து வளைந்து இருந்த அகழியில் கொட்டினார்கள்.

அகழி மேடு ஆனதால் அகில்மேடு வீதிகள் ஆயின.

## தன்னம்பிக்கைச் சிந்தனை

“எப்பொழுதும் மகிழ்வாக இருப்பதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன.
ஒன்று: உழைப்பு.
இரண்டு: உழைப்பு.
மூன்று: உழைப்பு”

“உனக்குள்
யுத்தம் செய் மாசு
இருந்தால்
சுத்தம் செய்!”

*–சிந்தனைக் கவிஞர் கவிதாசன்*



## வாழ்த்துகிறோம்...

நடிகர் சிவகுமார் தலைவராகவும், பரணி பில்டர்ஸ் பாலசுப்பிரமணி செயலாளராகவும், சக்தி மசாலா குழும தலைவர்கள் துரைசாமி, சாந்தி துரைசாமி ஆகியோர் பொருளாளர்களாகவும் இருந்து நடத்திவரும் ‘சிகரம்’ ஐஏஎஸ் இலவச பயிற்சி மையத்தில் பயின்ற திருப்பூர் மாவட்டம் வெறுவேடம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சி.மோகன தீபிகா மத்திய குடிமைப் பணிகள் தேர்வில் தேசிய அளவில் 617-ம் இடம்பிடித்துள்ளார். அந்த மாணவிக்கு அறக்கட்டளை செயலாளர் பரணி. பாலசுப்பிரமணி நினைவுப் பரிசை வழங்கிப் பாராட்டினார்.

# வாழ்த்துகிறோம்...


கோவை கொங்கு நண்பர்கள் சங்கம்
“கொங்கு சாதனையாளர் விருது”
திரு K.R.நாகராஜன் அவர்கள்
நிறுவனர் மற்றும் தலைவர்,
ராம்ராஜ் குழும


கோவை கொங்கு நண்பர்கள் சங்கம்
“கொங்கு சாதனையாளர் விருது”
டாக்டர். C.பழனிவேலு அவர்கள்


கோவை கொங்கு நண்பர்கள் சங்கம்
“கொங்கு சுடர் விருது”
டாக்டர் S.சந்திரலேகா அவர்கள்

**ஜி.கே.மணி** M.L.A
கௌரவத் தலைவர், பாட்டாளி மக்கள் கட்சி,
சட்டமன்றக் குழு தலைவர்,
சேர்மன், Dr. இராமதாஸ் கல்வி அறக்கட்டளை,
தலைவர், பொங்குதமிழ் வளர்ச்சி அறக்கட்டளை,
தலைவர், பொங்குதமிழ் பண்ணிசை மணிமன்றம்,
பென்னாகரம் - 636810, தர்மபுரி மாவட்டம்.

A-8, அரசினர் தோட்டம்,
சென்னை - 600002,
செல்பேசி: 9443041543,
தொலைபேசி: 044-25333334,
மின்னஞ்சல்: gkmanipresidentpmk@gmail.com.

*நாள்: 08.04.2025*

# சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்-2025

**பேரன்புடையீர்,வணக்கம்.**

சித்திரை மாதம் (விசுவாசுவ வருடம்) 1-ஆம் தேதி முதல் புதிய சிந்தனை,புது நம்பிக்கை,புத்தெழுச்சி, புதிய முயற்சிகள், புதிய முன்னேற்றங்கள் கண்டு,நிறைந்த வளம் பெருகி,எல்லாம் நல்லவையாய் அமைய தாங்களும், குடும்பத்தினரும் ஆரோக்கியமுடன், மகிழ்ச்சியுடன், மன நிறைவுடன் எல்லா வளமும், எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ இதயங்கனிந்த "**சித்திரை திருநாள்**" நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்திரை மாதம் வசந்த காலம் எங்கு பார்த்தாலும் பூக்கள் பூத்து குலுங்கும் காலம். தமிழ் மன்னர்கள், நமது முன்னோர்கள் வசந்த விழாவாக,இந்திர விழாவாக கொண்டாடிய மாதம்.இம்மாதத்தில் கிராமங்கள்-தோறும் எங்கு பார்த்தாலும் திருவிழாக்களும்,கொண்டாட்டங்களும் நிறைந்து காணப்படும்.

**"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது - அதனினும் ஞானமும் கல்வியும் ஆயத்தல் அரிது"**
பண்பும், தாழிலும் சிறந்து விளங்குவது அதனினும் அரிது.தமிழ்நாட்டில் பல்வேறு சமுதாயங்கள் வாழ்ந்து வருகின்றன.ஒவ்வொரு சமுதாயத்திற்கும் திருமணம் முறையில் வழிபாட்டு முறையில் என சிறப்பு உண்டு. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் பூர்வீக குடிகளாக,மண்ணின் மைந்தர்களாக,உலகின் மூத்த மொழி-யான தமிழை தாய் மொழியாக கொண்ட பெருமைக்குரிய கொங்கு வேளாளர் கவுண்டர் சமுதாயத்தில் பிறந்து வளர்ந்து வரும் தங்களுக்கு "**சித்திரை திருநாள்**"வாழ்த்துக்கள் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகி-றேன்.

தமிழ்நாட்டில் ஈரோடு,கரூர்,திருப்பூர்,கோயம்புத்தூர்,நாமக்கல்,சேலம்,தர்மபுரி,கிருஷ்ணகிரி,திண்டுக்கல், நீலகிரி போன்ற மேற்கு மாவட்டங்களில் பரவலாக கர்நாடகாவிலும் வேறு சில மாநிலங்களிலும், ஒரு சில நாடுகளிலும் வாழ்ந்து வரும் பெருமைக்குரிய சமுதாயம். வேளாண்மையை தொழிலாகவும், தூய பழக்க வழக்கம்,விருந்தோம்பல்,உயர் பண்பாடு,ஒழுக்கம் கட்டுப்பாடு,ஒற்றுமை,நேர்மை,வாய்மை ஆகியவற்றில் போற்றப்படும் சமுதாயம்.வேளாண்மையிலும்,அரசியலிலும் சிறந்து விளங்குவதோடு தொழில் வளர்ச்சியில் சாதனை படைத்து அரசுக்கு அதிக வரி செலுத்தும் சமுதாயமாக,குறிப்பாக நூற்பாலைகள்,சாயப்பட்டறைகள், பின்னல் ஆடைகள்,ஜவுளி தொழில்,கோழி பண்ணைகள்,லாரி பாடி பில்டிங்,ஆட்டோ மொபைல் பாகங்கள், கல்வி நிறுவனங்கள்,முட்டை ஏற்றுமதி,மஞ்சள் ஏற்றுமதி, பெரிய ஒப்பந்த நிறுவனங்கள் என தொழில் வளர்ச்சியும், ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருவதும் பெருமைக்குரியது.

கவுண்டர் சமுதாயத்தில் நான் பெரிதும் போற்றும் பெருமைக்குரியவர்கள்,எனது படிப்பை முடித்து எனது குருவாக ஏற்றுக்கொண்ட சுவாமிஜி ஸ்ரீமத் சித்பவானந்த மகராஜ் அவர்கள், அவரோடு இருந்த என் மீது அதிக பாசத்தை பொழிந்த சுவாமிஜி ஸ்ரீமத் நித்தியானந்த மகராஜ் அவர்கள்,அடுத்து ஸ்ரீமத் குகானந்த மகராஜ் அவர்கள்,நான் பெரிதும் மதித்த என்னை அழைத்து அடிக்கடி பேசியவர்அருட்செல்வர் பெரியவர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்கள். மூத்த தலைவர் சி.சுப்பிரமணியம் அவர்கள், நான் அடிக்கடி சந்தித்த கோவை செழியன் அவர்கள் மற்றும் முன்னாள்,இன்னாள் அரசியல் தலைவர்கள்,தொழிலதிபர்கள்,நண்பர்கள் என ஏராளமானவர்கள் உண்டு.நான் அதிகம் நேசித்ததாலோ என்னவோ சமீபத்தில் கொங்கு நாடு அறக்கட்டளை சார்பில் எனக்கு அருட்செல்வர் விருது வழங்கப்பட்டது, நான் பெருமையாகவே கருதுகிறேன்.

13- ஆம் நூற்றாண்டில் கொங்கு பகுதியில் ஆட்சி செய்த லிங்கைய கவுண்டர் என்னும் காளிங்கராயர் பவானி ஆற்றையும்,நொய்யல் ஆற்றையும் இணைத்து வேளாண்மை தொழிலுக்கு பெரும் பங்காற்றியவர். ஆங்கிலேயரை எதிர்த்து போராடி வெற்றி பெற்ற தீரன் சின்னமலை அவர்களுக்கு மணிமண்டபம்,திருவுரு-வச்சிலை அமைக்க வேண்டும் என முதன் முதலில் சட்டமன்றத்தில் வாதாடியவனும் அதை நிறைவேற காரணமாக இருந்தவன் உங்கள் சகோதரன் ஜி.கே.மணி என்பதை அனைவரும் அறிந்ததே. அவரது நினைவு நாள் ஓடாநிலையில் தவறாமல் ஆண்டுதோறும் கலந்துகொண்டு வருகிறேன்.வாழ்த்துக்கள். தங்களுக்கும்,தங்கள் குடும்பத்தினருக்கும் இனிய "**சித்திரை திருநாள்**"வாழ்த்துக்கள்...நன்றி...

இவண்,
அன்பு என்றும் மறவாத,

**ஜி.கே.மணி** M.L.A
**கவுரவத் தலைவர், பா.ம.க**
**சட்டமன்ற குழு தலைவர்**
**பென்னாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டம்.**





# திறப்பு விழா

**சென்னை** ராயப்பேட்டையில் உள்ள தீரன் சின்னமலை மாளிகையில் புது பொலிவுடன் நவீன தங்கும் அறை (டீலக்ஸ் ரூம்) ஒன்று 09.05.2025 அன்று திறக்கப்பட்டது. அதன் முழு உருவாக்க செலவையும் நமது சங்க பொருளாளர் திரு செ. கொங்கு வேள் அவர்கள் ஏற்றுக் கொண்டார். அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகளை தெரிவிப்பதுடன், அனைவரும் அறையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# குழந்தைகளுக்கான தொழிற் சுற்றுலா மற்றும் இலவச நீர் மோர் வழங்கும் விழா!






சென்னை போரூர் கொங்குநல சங்கத்தின் சார்பாக கடந்த நான்கு ஆண்டுகளாக குடும்ப விழா, குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் போன்றவை தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறது. சென்ற ஏப்ரல் 12ஆம் தேதி போரூர் கொங்குநல சங்கத்தின் உறுப்பினர்களது 25 குழந்தைகள், சென்னையில் அமைந்துள்ள யூனிட்டெக் பிளாஸ்டோ நிறுவனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நிறுவனத்தின் தலைவர் திரு ஜெகதீசன் அவர்கள் தொழிற்சாலை பற்றிய விரிவான விபரங்களை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டு பல்வேறு அனுபவங்களை பெற்றனர். மேலும் ஏப்ரல் 20 ஆம் தேதி அன்று போரூர் கொங்குநல சங்கத்தின் சார்பாக மதனந்தபுரம் அம்மா உணவகம் அருகே பொதுமக்களுக்கு இலவச நீர்மோர் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் சுமார் 400 நபர்கள் பயன் பெற்றனர்.

**செய்தி வெளியீடு எண் : 1037** **நாள் : 14.05.2025**

**செய்தி வெளியீடு**

**போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் , சென்னை**

படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில்

( TNPSC, SSC, IBPS, RRB etc) போட்டித் தேர்வுக்கான பயிற்சி வழங்குதல்

TNPSC, SSC, IBPS, RRB ஆகிய முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்களுக்கு தமிழக அரசின் சார்பில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களால் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள், சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரியில் 500 இடங்களுக்கும், சென்னை சேப்பாக்கம் மாநிலக் கல்லூரி வளாகத்தில் 300 இடங்களுக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது.

மேற்படி போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தேர்வர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு இணையவழியாக விண்ணப்பங்கள் பெற்று சேர்க்கை, நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகள் பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை ஆறு மாத காலம் வாராந்திர வேலை நாட்களில் நடைபெற உள்ளது. பயிற்சி வகுப்புகளில் சேர விரும்பும் தேர்வர்கள் குறைந்த பட்சம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பதோடு 01.01.2025 அன்று 18 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேற்படி, போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களில் உணவும் தங்கும் வசதிகளும் இல்லை.

பயிற்சியில் சேர விரும்பும் தேர்வர்கள் www.cecc.in வாயிலாக 16.05.2025 முதல் 31.05.2025 வரை விண்ணப்பிக்கலாம். கூடுதல் விவரங்களை மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 044-25954905 மற்றும் 044-28510537 ஆகிய தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள இனவாரியான இடங்களுக்கு ஏற்ப தேர்வர்கள் தெரிவு செய்யப்பட்டு தேர்வர்களின் விவரங்கள் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் வெளியிடப்படும், ஜூன் மாதம் முதல் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

கூடுதல் தலைமைச் செயலாளர்/
பயிற்சித் துறை தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 136. | K.Ashok Kumar | பனங்காடை | 25/06/1995 கார்த்திகை | M.E. | Senior Technical (medical Devices) | Salem 9.07 A.M. | 99523 02325 |
| 138 | M.Devdattan | கண்ணந்தை | 03/08/1999 ரேவதி | CA (Chartard Account) | FPXA Analyst | கோபி 1.30 P.M. | 99440 80754 |
| 139 | Soundhar | தூரன் | 04/12/1995 பரணி | B.E. Mechantronics | Business (Kannaa Agency) | Erode 5.37 P.M. | 89404 34546 97875 77799 |
| 140 | M.Shrivishnu | பனங்காடன் | 02/12/1993 புனர்பூசம் | B.E., | Lecturer (IAS Academy Chennai) | Coimbatore 7.22 P.M. | 95857 58718 93632 24950 |
| 141 | S.R.ஆதிஷ் | மணியன் | 06/07/1995 சித்திரை | B.E.(Auto Mobiles) | U.K. | Kannur 6.20 P.M. | 94432 20189 94869 59179 |
| 142 | N.Pradeep | சந்தந்தை | 30/08/1988 ரேவதி | B.E. (Chemical Engineer) | Process Engineer (Abudhabi) | Tiruchirapalli 8.35 P.M. | 96292 23726 +65 85358375 |
| 143 | ம.ஆதவன் | காடை | 28/08/1998 விசாகம் | M.Tech, Biotech | Business Researcher | Coimbatore 7.05 P.M. | 72000 20321 94457 67108 |
| 144 | K.திலகன் | அந்துவன் | 19/7/1991 சுவாதி | B.E.,M.S., Ph.D., (IIT-Chennai) | Senior Scientist (IIT Chennai) | Karur 10.27 A.M. | 96772 117111 |
| 145 | S.Sathish Kumar | பில்லன் | 05/04/1997 சதயம் | B.Com., CS.CE | Graphic designer Business-Hostel | Karur 05.17 A.M. | 99629 21476 79049 65880 |
| 146 | R.Vinoth | செல்லன் | 09/07/1991 ரோகிணி | B.E., (ECE) | Business | Chennai 8.00 A.M. | 90430 10500 94440 50494 |
| 147 | B.Hari Ragavendra | பைரன் | 10/03/2000 பரணி | B.E.,M.S, | Boston consulting Group (Private) | Gobi 9.36 P.M. | 94433 83204 94444 43155 |

## மணமகன் தேவை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 155 | S.B.Nivetha | செம்பூதன் | 22/06/2002 அனுஷம் | B.Tech (IT) | Software Engineer | நாமக்கல் 7.56 P.M. | 98403 70311 90030 23210 |
| 156 | S.M.ஸ்வேதா | பொருள் ஈந்தார் | 18/12/1998 கேட்டை | B.E. (Tech) | - | Salem 12.31 P.M. | 98427 98247 97152 98247 |
| 157 | B.Hovitha | கண்ணன் | 11/10/2001 பூசம் | B.Tech (Aerospeace) | Software Technical Analyst | Salem 5.22 P.M. | 94455 06663 94440 28485 |
| 158 | R.Sanmitha | பெரிய | 07/07/1999 ரேவதி | M.A. (Eng) | MNC (Chennai) | Erode 1.10 A.M. | 94449 12009 94456 18151 |
| 147 | R.ரம்யா | விழியன் | 11/02/1993 சித்திரை | B.E. EEE | IT Software | Erode 07.09 A.M. | 99520 92347 98650 92150 |
| 154 | K.சங்கவி | பனங்காடை | 09/06/1999 ரேவதி | M.Sc., B.Ed., | Teacher (Chennai) | Salem 11.04 A.M. | 99523 02325 |



# சென்னை மெட்டெக்ஸ் லேப் பி.லிட்
# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

*Where Test Inspires Trust...*

**Registered Office : Jothi Complex, No.83, MKN Road, Guindy, Chennai - 600 032, Tamilnadu, India**

**Contact : 86869 74749 | 044 - 2232 3163 / 4217 9490**

**ISO 17025:2017 NABL ACCREDITED** | **TESTING LABORATORY** | **WATER, FOOD PRODUCT AND ENVIRONMENTAL**



Stability Chamber

Accreditations / Approvals : ISO 17025 : 2017 NABL TC - 5589

Stability is the Capability Of a specific formulation in a particular container closure system to remain within its physical chemical, microbiological, toxicological,the rapeutic specifications at a defined storage condition stability is expressed in terms of shelf Life.

| S.No | Study | Storage condition | Minimum time |
| --- | --- | --- | --- |
| 1 | Accelerated | 40º C ± 2º C | 75 % RH ± 5% RH 6 months |
| 2 | Long Term | 30º C ± 2º C | 60 % RH ± 5% RH12 months |



Water Activity Meter

- Physio-Chemical Testing
- Microbiological Testing
- Heavy Metals
- Toxin Analysis



www.mettexlab.com

**Sample Collection Centre :-**

**ERODE : 89398 72544 | 72990 59215 | COIMBATORE : 98410 53041 | PUDUCHERRY : 95512 50027**

**MUMBAI : 89398 72540 | BANGALORE : 89399 90282 | COONOOR : 89399 98324**

**REGD. NEWS PAPER /**
Posted at Egmore RMS/1 (Pattrika Chennai) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
Registration Number of the Newspaper: TNTAM/2016/69320 | Postal Reg No. TN/CH(C)/602/2025-2027
Date of Publication Second Week of every month




அனுப்புதல்
சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
வெள்ளி விழா இல்லம்
எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, இராயப்பேட்டை,
சென்னை- 600 014.

பெறுநர்